விலை ரூபா: 10.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 09 சனிக்கிழமை (24.12.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 05

ராம்கோ
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து


# கடற்படையின் வாகனத்தொடரணி மீது பேசாலையில் கிளைமோர்த் தாக்குதல்

## 15கடற்படையினர் பலி; 15 பேர் படுகாயம்
## பஸ்-டிரக் வெடித்துச் சிதறியது

(மன்னார்)

மன்னார் பேசாலையில் கடற் படையின் வாகனத் தொடரணி மீது நேற்றுக் மேற்கொள்ளப்பட்ட கிளை மோர்த்தாக்குத லில் 15 கடற் படையினர் ஸ்தலத்தில் பலி யாகினர். மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது. மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கிச் சென்ற வாகனத் தொடரணி மீதே இத்தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது.




இத்தாக்குதலில் கடற் படை யின் பஸ் ஒன்று எரிந்து நாச மாகியது. மற்றொரு டிரக் பலத்த சேதத்திற் குள்ளாகியது. இச் சம்பவத்தினையடுத்து மன்னாரில் பதற்ற நிலை ஏற் பட்டுள்ளது. பலர் கடற் படை யினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள னர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் தாக்குதல் இரு படையினர் படுகாயம்
### மக்கள்மீது பதில் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவுகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாகவுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் கிரனைட் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் 2படையினர் படுகாய மடைந்தனர். படையினர் திருப்பிச் சுட்டதில் பெண்ணொருவர் உட்பட இருவர் படுகாய மடைந்தனர் ;

பான்சி கடையொன்றில் பணிபுரியும் மார்க்கண்டு புஷ்பமலர் (வயது 32) மற்றும் சின்னத்தம்பி இராஜதுரை (வயது 63) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனும திக்கப்பட்டனர்.

படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி ஓடிய போதே இவர்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப் பட்டது. இதேவேளை படையினர் மீதான கிர னைட் தாக்குதலையடுத்து அவர்கள் மக்களை கடுமையாகத் தாக்கியுள்ள்னர். இதில் பலர் காயமடைந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவுச் சம்பவத்தின் எதிரொலியே மன்னாரில் நேற்று இடம் பெற்ற தாக்குதல்
### மன்னார் மாவட்ட மக்கள் படை அறிக்கை

(மன்னார்)

மன்னாரில் நேற்று கடற்படையினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு மன் னார் மாவட்ட பொங்கியெழும் மக்கள்படை உரிமைகோரியுள்ளது.

கடந்த 17ஆம் திகதி புங்குடுதீவில் சகோ தரி தர்சினி கடற்படையினரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமைக்கு பழிவாங்கும் முகமாகவும் யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படைக்கு கரம்கொடுக் கும் முகமாகவுமே இத்தாக்குதல் மேற்கொள் ளப்பட்டதாகவும் இது ஓர் இறுதிஎச்சரிக்கை எனவும் மக்கள் படைதெரிவித்துள்ளது.

இனிவரும் காலத்தில் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இராணுவ அட்டூழியங்க ளுக்கு இதுபோன்ற பாரிய அழிவுகளை அரச படைகள் சந்திக்கநேரிடும் என மன்னார் மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை தெரி வித்துள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்ட பொங்கி யெழும் மக்கள்படைக்கு யாழ்.மாவட்ட பொங் கியெழும் மக்கள் படை நன்றிதெரிவித்துள்ளது.

புங்குடுதீவுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் அதிர்ச்சியில் ஆட்டோச் சாரதி மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் இராணுவத்தினரின் தாக்குதலையடுத்து அதிர்ச்சியடைந்த ஆட் டோசாரதி ஒருவர் மரணமானார்.

இச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னால் உள்ள இராணுவக் காவலரண் மீது இனந்தெரியா தோரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் திருப் பிச்சுட்டதுடன் பொதுமக்களையும் தாக்கினர் அதன்போது அங்குநின்ற பிரஸ்தாபச் சாரதி அதிர்ச்சியில் ஸ்தலத்திலேயே மரணமானார்.

உயிரிழந்தவர் சாவகச்சேரியைச் சேர்ந்த நல்லதம்பி தர்மலிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-108)

## இராணுவத்தின் தாக்குதல்களால் பல பொதுமக்கள் நேற்றும் காயம்

யாழ்ப்பாணத்தில் நேற்றும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளது. சாவகச்சேரி ,கல்வியங்காடு, கொக்குவில் , தாவடி ,உடுவில் மற்றும் சில பகுதிகளிலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கல்வியங்காட்டில் பி.ப. 4.30மணியளவில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட் டுள்ளது. இதன்போது ஒரு இராணுவச்சிப்பாய் படுகாயமடைந்தார். இதனையடுத்து இரா ணுவத்தினர் மேற்கொண்ட கண் மூடித்தன மான தாக்குதலில் வயோதிபர் ஒருவர் படு காயமடைந்தார். இப்பாதையூடான போக்கு வரத்துகள் கோயில் வீதியூடாக மேற்கொள் ளப்பட்டது.

உடுவில் பகுதியில் நேற்றிரவு இராணு வத்தினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள் ளது. இதனையடுத்து இராணுவத்தினர் திருப் பிச்சுட்டனர். சுற்றிவளைப்புத்தேடுதல்களும் மேற்கொள்ளப்பட்டது.

மருதனார்மடம், உடுவில் பகுதிகளில் நேற்றிரவு பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். இராணுவத்தினரால் நேற்றுப் பரவலாக மேற்கொள்ளப்பட்ட தாக் குதலில் 10இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இதேவேளை நேற் றிரவு யாழ்.நகர்ப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் குண்டுச்சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன. எனினும் சேத விடரம் குறித்து எதுவும் கிடைக் கவில்லை. (ச-8)

## இராணுவ புலனாய்வு சிப்பாய் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சிப்பாய் ஆர்.ஏ.தனபால நுவரெலியாவில் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குலண்டவில் இருந்து நுவரெலியாப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லும் வழியில் இவர் மீது நேற்றுக்காலை 9.30 மணியள வில் அடையாளம் தெரியாத நபர்கள் துப் பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் சம்பவ இடத்திலேய அந்தச் சிப்பாய் பலியானார்.

சம்பவம் நடந்தபோது புலனாய்வுப் பணி நிமிர்த்தமாக அவர் சிவில் உடையில் இருந்த தாகவும் இவரது மரணம் தொடர்பாக விசா ரணைகள் நடத்தப்படுவதாகவும நுவரெலி யாப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# நாட்டின் அபிவிருத்திக்கு புத்திஜீவிகளின் நேரடிப் பங்களிப்பு அவசியமானது

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கு புத்திஜீவிகளின் பங்களிப்பை நேரடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென விஞ்ஞான மற்றும தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

செல்வந்த நாடுகளின் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு உயர்மட்டத்திலுள்ளது. இலங்கையைப் போன்ற நாடுகளின் தொழில்நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை.

செல்வந்த, ஏழ்மை, நாடுகளுக்கிடையில் தொழில்நுட்பம் வேறுபாடாகத் திகழ்கிறது. இந்நிலையில், எம்மிடமிருக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் எமது நாட்டிலுள்ள விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்களை பயன்படுத்தியே நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் மேலும தெரிவித்துள்ளார். (ற-9)

## புகையிலை நாற்று விலை அதிகரிப்பு

வடமராட்சி பகுதியில் புகையிலை நடுகை மும்மரமாக நடைபெற்று வருகிறது. இதனால புகையிலை நாற றுக்கு நல்ல சிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடும்மழை காரணமாக கூடுதலான புகையிலை நாற்றுக்கள் அழிந்து போனதால் புகையிலை நாறறுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முன்னர் 100 நாற்று 75ரூபாவாக விற்கப்பட்டு வந்தது. இப்போது 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது. (த-35)

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் வான்வெளி எல்லை குறிப்பிடவில்லை

## வான்வெளியில் பறக்க விமானப்படைக்கே உரிமையுண்டு என்கிறார் விமானப்படைத்தளபதி

(கொழும்பு)

வான் வெளியில் எந்த ஒரு எல்லைகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாமையினால் இலங்கையின் வான் வெளியில் எந்த ஒரு பகுதியில பறக்கக்கூடிய உரிமை விமானப் படைக்குச் சொந்தமான விமானங்களுக்கு இருப்பதாக விமானப்படைத் தளபதி யொர்மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி என ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை யில் நிலப்பரப்பினை பிரித்து இருந்தாலும் வான் வெளி அவ்வாறு பிரிக்கப்படவில்லை.

எனவே அதன பூரணமான உரிமை இலங்கை விமானப்படையிரிடமே உண்டு.

இராணுவத்தால் மீட்கப்படாத தரைப் பகுதியின் மேலாக விமானப் படை விமானங்கள் செலுத்தப் படுவது போர் நிறுத்த ஒப்பந்தம் மீறலல்லாகாது.

ஆனல் அவ் விமானங்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல நடத்துவதானது போர் நிறுத்த ஒப்பந்த மீறலாகும் எனவும் அவா மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# இராசிபலன்

24.12.2005
(மார்கழி 09, சனிக்கிழமை)
அட்டமி முற்பகல் 11.27மணிவரை
அர்த்தம் பின்னிரவு 4.42 மணிவரை
இராகுகாலம் 09.26 - 10.56 மணிவரை
சுபநேரம் 6.52 - 7.55 மணிவரை
கரிநாள்

| | |
|---|---|
| மேடம் | ஜனவசியம், உறவினர் உதவி, எடுத்த காரியம் கைக்கூடும், தெய்வ சிந்தை. |
| இடபம் | விதண்டாவாதம், குடும்பக்கவலை, பணவிரயம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, ஆரோக்கியம். |
| கடகம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் வெறுப்பு, சயனசுகக் குறைவு. |
| சிங்கம் | எடுத்த காரியம் கைகூடும், சகோ தரர் உதவி, மனமகிழ்ச்சி, புகழ். |
| கன்னி | நல்லசெய்தி, அதிக பிரயாசை, புதிய திருப்பம், அதிகாரம். |
| துலாம் | ரோகநிலை, பிரயாணம், கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை. |
| விருச்சிகம் | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், வாகன பயம். |
| தனுசு | குடும்ப மகிழ்ச்சி, சென்ற இடத்தில் செலவாக்கு, தெய்வசிந்தை, பொருள்சேர்க்கை. |
| மகரம் | நல்ல முயற்சி, அதிகாரம், போசன சுகம், உடல் நலம். |
| கும்பம் | தாழ்ந்த சுபாவம், பணக்குறைவு, முயற்சி தாமதம், பூர்வபுண்ணிய கருமம. |
| மீனம் | மாதா சுகம், சுபகாரியச் செலவு, மனச்சோர்வு, தெய்வசிந்தை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# மருத்துவ முகாம்

(மருதங்கேணி)

வடமராட்சிகிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் சுனாமி அனர்த்த ஓராண்டு நினைவையொட்டி விசேட மருத்துவ முகாமொன்றை நடாத்த சுகாதார திணைக்களம் முன்வந்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு வைத்திய சேவைகளை வழங்கவுள்ளனர்.

சகல மக்களையும் இதில் கலந்துகொண்டு வைத்திய சேவைகளைப் பெறுமாறு சுகாதார திணைக்களம் கேட்டுள்ளது. (த-35)







யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 1போலர் பாடசாலைகளின் பாலர் கலைவிழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட "வலம்புரி" நாளிதழ் நிறுவன நிர்வாக இயக்குநர் உயர் திரு.வெற்றிவேலாயுதம் அவர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதைக் காணலாம். அருகில் கழகப்பத்திராதிபர் கலைஞானச் சுடா இராசையா ஸ்ரீதரன் அவர்களும் கழகத் தலைவர் திருமதி சறோஜினி ஜெயபாலசிங்கம் அவர்களும் காணப்படுவதை முதலாவது படத்திலும், சிறுவாகளின் கலைநிகழ்ச்சிகளை மறுபடங்களிலும் காணலாம்.

# கல்விச் செயற்பாடுகளை புறக்கணிக்க வடமராட்சி கிழக்கு ஆசிரியர்சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள், கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மிலேச்சத்தனமாக இராணுவத்தினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாகவும் குடாநாட்டின் அனைத்து அரச கல்வி சார் செயற்பாடுகளையும் இம்மாதம் 26ஆம் திகதிமுதல் பகிஷ்கரிக்க வடமராட்சி கிழக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அண்மையில் இளம் பெண் ஒருவர் புங்குடுதீவு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திப் பின்னர் படுகொலை செய்யப்பட்மையையும் இச் சங்கம் கண்டித்துள்ளது.

மேலும் இந்திய வல்லாதிக்கத்தின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளமை எமது தமிழ் தேசிய இறைமையை மிகவும் மோசமாகப் பாதிக்கும் செயல் எனபதனால் இதனை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

பல்கலைக்கழகம், கல்லூரிகள் ஆகியவற்றின் சூழலில் முற்றுகையிட்டுள்ள இராணுவம் உடனடியாக அப்பகுதிகளில் இருந்து விலக்கப்படவேண்டும்.

அப்பாவிப் பொதுமக்கள் மீதான கண்மூடிததனமான துப்பாக்கிப் பிரயோகம, தாக்குதல்கள், கெடுபிடிகள், மிரட்டல்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.மேற்போன்ற காரணங்களை முன்வைத்து வடமராட்சி கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் சகல அரச நிறுவனங்களையும் பணிப் புறக்கணிப்புக்கு அறை விடுத்துள்ளது. (ச-8)

## வேலியோரத்தில் பற்றை வைத்தியசாலையில் நுளம்பு

வட்டுக்கோட்டை-கிராமிய வைத்தியசாலையின் பின்புற வேலியோரத்தில் பாரிய பற்றைகளும், பூண்டுகளும் வளர்ந்திருப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு சென்றுவருவதற்கு இப்பற்றைகள் தடையாக இருப்பதாகவும் வைதத்திய சாலை விடுதியில் இருந்து சிகிச்சை பெறுவோர்க்கு நுளம்புத தொல்லைகள் அதிகரித்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (த-49)


# வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி
குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

# 3 கடற்படையினரும் கடலில் மூழ்கியதை எமது போராளிகள் உறுதிப்படுத்தினர்

## -சு.ப.தமிழ்ச் செல்வன் க.கா.குழுவுக்கு கடிதம்

(கிளிநொச்சி)

**மன்னார்க் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த கடற்படையினர் படகில் உயிரிழந்த இரு கடற்படையினரின் சடலங்களுடன் கடும் காயங்களுக்குள்ளான நிலையில் ஒரு கடற்பாடைவீரர் இருந்ததை எமது போராளிகள் கண் டனர்.**

**மூழ்கிக்கொண்டிருந்த கடற் படையின் படகையும் அதிலிருந்த சடலங்களையும் கைவிட்டு விட்டு காயமடைந்த படைவீரரைக் காப்பாற்றுவதற்குத் தீர்மானித்த எமது போராளிகள், ஏற்கனவே கடற்படையின் தாக்குதலால் கடுமையாகச் சேதமடைந்திருந்த எமது படகில் காய மடைந்த கடற்படை வீரரை ஏற்றினார்.**

**ஆனால், கடற்படையினரின் தாக்குதலால் கடுமையாகச் சேதமடைந்திருந்த எமது படகில் வேகமாக நீர் புகத் தொடங்கியதுடன், காயமடைந்திருந்த படைவீரருடன் அப்படகு இறுதியில் மூழகிப்போனது என எமது போராளிகள் தெரிவித்தனர்.**



இவ்வாறு மன்னார் கடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தை விளக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாா.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

டிசம்பர் 22, 2005அதிகாலையில், மன்னார் கடலில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக முழுமையான விபரங்களை வழங்குவதற்காக இக்கடிதத்தினைத் தங்களுக்கு எழுதுகின்ரேன்.

கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான எமது படகுகள் தாமதமாகவே கரையை வந்தடைந்தாலும், இத்தாக்குதலில் உயிர் தப்பிய எமது அங்கத்தவர்களிடமிருந்து முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் எம்மால் உரிய நேரத்தில் இச்சம்பவம் தொடர்பான தகவலைத் தர முடியாமற் போய்விட்டது.

எமது மூன்று படகுகள் மன்னார் கடலில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், அப்படகுத் தொகுதியினை வழிமறித்த கடற்படை அதன்மீது தாக்குதலை ஆரம்பித்தது. இதனால் தற்காப்புக்காக எமது போராளிகள் திருப்பித்தாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடற்படைப் படகுகள் பின் வாங்கிச் சென்றபோது, ஒரு படகு தரித்துநிற்பதை எமது போராளிகள் அவதானித்தார்கள். அப் படகு நகராமல் நின்றமையினால் அப்படகை அண்மித்த எமது போராளிகள், அப்படகில் ஏற்பட்ட சேதம் காரணமாக அப்படகு கடலில் மூழ்கிக்கொண்டிருந்ததையும் அதில் இரண்டு படையினர் இறந்திருந்ததையும் ஒரு படைவீரர் கடுமையான காயங்களுக்கு உளளாகிய நிலையில் இருப்பதையும கண்டனர்.

மூழ்கிக்கொண்டிருந்த கடற்படையின் படகினையும் அதிலிருந்த சடலங்களையும் கைவிட்டு விட்டு, காயமடைந்த படைவீரரைக் காப்பாற்றுவதற்குத் தீர்மானித்த எமது போராளிகள், ஏற்கனவே கடற்படையின் தாக்குதலால் சேதமடைந்திருந்த எமது படகில் அவரை ஏற்றினார்கள். கடற்படையினரின் தாககுதலால் கடுமையாகச் சேதமடைந்திருந்த எமது படகில், வேமாக நீர் புகத் தொடங்கியதுடன், காயமடைநீதிருந்த அப்படைவீரருடன் அப்படகு இறுதியில் மூழ்கிப்போனது.

எமது போராளிகள் காயமடைந்திருந்த தம்முடைய போராளி ஒருவருடன் ஒருவாறாக நீந்தி மாலையிலேயே எமது பகுதியினை வந்தடைந்தார்கள். அவர்களிடம் மேற்கெண்ட விசாரணைகளின் போதே மேற்குறிப்பிட்ட இத்தகவல்கள் பெறப்பட்டன.

இதற்கிடையில், புலிகள் மூன்று கடற்படையினரைக் கடத்தி வட்டதாக அரசாங்கம் கண்காணிபபுக்குழுவிற்கும் ஊடகங்களுக்கும் விரைவாக அறிவித்தது. கடற்படையின் படகில் இருந்த மூன்று கடற்படையினரும் கடலில் மூழ்கிவிட்டதை எமது போராளிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்விற்கமைவாக தரையிலும் கடலிலும் எமது அங்கத்தவர்கள் பயணம செய்வதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தித் தரும்படி நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

மேலும், எமது போராளிகள் தற்காப்புக்கான ஆயுதங்களுடன் கடலில் இப்பயணத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்வார்கள் என்பதையும், எதிர்காலத்தில் பயணத்தினை ஒழுங்குபடுத்துவதற்கான எமது கோரிக்கைக்கு உத்தியோகபூர்வமாக பதிலளிக்க வேண்டியது அவசியம் என்பதையும் தஙகளுக்குத் தெரியப்படுத்திக்கொளகின்றோம்.

உத்தியோக பூர்வமான ஒழுங்குபடுத்தலை வழங்குவதில் காட்டப்படும் விரைவான நடவடிக்கை இப்படியான சம்பவங்கள் மீள இடம பெறுவதைத் தவிர்த்துக் கெள்ளும் என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுள்ளது. (ந-4)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2006 ஏப்ரலுக்கு பின் நடைபெறும்?

உளளூராட்சி சபைத்தோதலை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தின் பின்னர் நடாத்துவதற்கு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணையாளரை எழுத்து மூலம் கேட்டுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒருவருடத்தின் பின் நடந்துமாறு ஜனாதிபதியிடமும் எழுத்து மூலம் கேட்டிருப்பதாக அந்த அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

ஒரு வருட காலத்தின் பின்னா தேர்தலை நடாத்துவதற்கான மூன்று முக்கியமான காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி தேர்தல் முறையை திருத்தம் செய்வது தொடர்பாக அரசாங்கத்தின கவனம் திரும்பியுள்ளது எனக் கூறிய அவர் , இதற்காக சுமார் ஆறு மாதங்களாவது தேவைப்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இம்முறை நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் 2004 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் இடாப்பில் பெருமஎண்ணிக்கையானோரின் பெயர்கள் சேர்க்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டை புறந்தள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

2006ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறுமாயின் 2005ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புப் பட்டியலை பயன்படுத்தமுடியும். இதைத்தவிர 5 தடவைகள் பிற்போடப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னைய வாக்காளர் பட்டியலை நீக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-8)

# வாக்காளர் பதிவேடுகள் கணனி மயப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

வாக்காளர் பதிவேடுகளை கணனி மயப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பதிவேடுகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் களுத்துறை மாவட்ட வாக்காளர் பற்றிய தகவல்கள் கணனிகளில் சேர்க்கப்படுவதாகவும் உதவித் தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் தெரிவித்துளளார்.

கிராம உத்தியோகத்தர்கள் சமர்ப்பித்த தரவுகளின் அடிப்படையில் பதிவேடுகளில் திருத்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இந்த நடைமுறையின் காரணமாக ஒரே பெயர் இரண்டு தடவைகள் பதியப்படுவதை தடுக்கப்படும் என பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கணனி மயப்படுத்தப்பட்ட பதிவேட்டில் வாக்காளரின் தேசிய அடையாளஅட்டை இலக்கங்களும் சேர்க்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

# கிளைமோர்த் தாக்குதலில் பாடசாலைக்கு சேதம்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பாக நேற்று அதிகாலை 5மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

அவ்வேளை வீதியில் எவரும் இல்லாததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை பாடசாலையின் சிறு பகுதி சேதத்திற்குள்ளானது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தினையடுத்து அப்பகுதியில் சில நிமிட நேரம் பதற்றம் நிலவியது. கரும புலி கப்டன் மில்லரின் சிலையையும், ஞாபகார்த்த பூங்காவையும் சிதைககும் நோக்குடனேயே இக் கிளை மோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ச-அ,101)





தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மயில்வாகன சுவாமியின் 20ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் பரிசுபெற்ற மாணவன் ஒருவருக்கு சுவாமி சித் ரூபானந்தா பரிசுவழங்குவதையும் இப் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளையும் படங்களில் காணலாம்.

(படம்:-மருதங்கேணி செய்தியாளர்)

## இன்று ஒரு தகவல்

# பறவைகள் புகட்டும் பாடம்

இந்த உலகில் வாழும் உயிரினங்களுள் பறவைகள் தனிச் சிறப்புடையனவாகும். பறவைகளின் சிறப்புக்களைக் கண்டு அவற்றை நன்கு இரசித்தமையினாலே தான் மனிதரையும், ஒவ்வொருவருடைய போக்குகள், செயல்கள் ,குணாதிசயங்களை பறவைகளுடன் ஒப்பிட்டுக் கிளிபோல எனவும், மயில்போல எனவும், குயில் போல எனவும், அன்னம் போல எனவும், காகம் போல எனவும் பல்வேறு பறவைகளுடன் ஒப்பிட்டுப் பேசுவதனை அன்றாட வாழ்விற் பார்க்கவும், கேட்கவும் முடிகின்றது.

பறவைகளிடமிருந்து மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பலவாகும். அன்றாட வாழ்க்கையிலேயே பறவைகள் நேரம், காலம் அறிந்து எழுதலும் ,நேரத்தை அனுசரித்தலும், தத்தம் உறவுகளுடன் கூடி வாழ்தலும், உணவு தேடுதலும்,தம் குஞ்சுகளைப் பாதுகாத்தலும், தமக்கு ஏற்றபடி கூடுகள், இல்லிடங்கள் அமைத்தலும், ஆபத்து நேரங்களில் கூக்குரலிடுதலும், உணவைச் சேகரித்தல்,பகிர்ந்துண்ணல் போன்றனவும் திசைகளைத் தெரிந்து இடம்மாறுதல்,பறத்தலும், இன்னோரன்ன பல் வேறு பறவைகளின் வாழ்க்கைச் செயற்பாடுகளும் மக்களுக்கு வழிகாட்டும் விதமாக அமைந்திருப்பதனை எண்ணும் போது அவற்றின் வாழ்க்கை முறைகள் எமக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக உள்ளன வன்றோ!

மேலும் பறவைகள் குடும்ப வாழ்க்கையிலிருந்தும், அவை தம் குஞ்சுகளைப் பராமரிப்பதிலிருந்தும் கூட நாம் படிக்க வேண்டிய அனுபவங்கள் பலவாகும். ஆண் பறவை களும், பெண்பறவைகளும் இணைந்து கூடுகட்டுவதும் முட்டை இட்டு மாறி,மாறி அடைகாத்து குஞ்சு பொரிப் பதும், குஞ்சுகளுக்கு ஆபத்து வராமற் பாதுகாப்பதும், அவற்றிற்கு உணவு ஊட்டுவதும்,சில பறவைகள் தம் சோடியை இழந்ததும் படும் வேதனைகளும், கால நிலைகள் அறிந்து இடம்பெயர்தல், கூடிவாழ்தல், உணவு தேடுதல் என்பன யாவும் மக்கள் பறவைகளிடம் கற்றுக்கொள்ள வேண்டிய நல்ல பாடங்களாகும்.

நம் நாட்டிலே காகத்தை கறுப்பெனவும், அருவருப்பான பறவை எனவும் விரட்டுவார்கள். ஆனால் இந்தக் காகத் திடம் மனிதர் கற்றுக்கொள்ள வேண்டிய நல்லகுணம் பற்றிப் பெரியோர்

"காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனை புகுதல் - சால
உ்ற்றாரோடு உண்ணல், உரையாடல் இவை யாவும்
கற்றாலோ காக்கைக்குணம்"

என அழகாகப் பாடல் மூலம் விளக்கியுள்ளனர்.

நம் முன்னோர் நள்ளிரவின் பின் கோழி கூவுதலைக் கொண்டே பொழுது விடியும் நேரத்தை அறிந்ததையும், காகம் கரைவதன் மூலம் விருந்தினர் வருகையையும், வரப்போகும் அபசகுனத்தை அறிந்ததையும், மழைக் கண்ணி எனும் குருவி பறப்பதன் மூலம் மழை வருதலை அறிந்ததையும், ஆந்தை, சுடலைக்குருவி போன்றவை வீட்டில் வந்து சப்தமிடுவதன் மூலம் வரப் போகும் துன்ப சம்பவங்களை அறிந்ததையும் கூறுவதை இன்றும் கேட்கக் கூடியதாகவும், தெரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

இன்றைய விஞ்ஞான உலகிற் பறவைகள் பறப்பதைக் கண்டே ஆகாய விமானங்களையும் சிருஷ்டித்ததாக நாம் அறியமுடிகின்றது.

கனடாவில் ஓர் ஆராய்ச்சியாளர் பறவைகள் செல்லும் திசையின் ஒழுங்கை மாற்றிவிட எண்ணி ஒரு செயற்கை யான காந்த புல சக்தியை ஏற்படுத்தி வழமையாக அவை செல்லும் திசையை மாற்றிவிட்டாராம். ஆயினும் சிறிது தூரம் அப்படித் திசைமாறிச் சென்ற பறவைகள் தாம் செல்லும் வழி தவறென உணர்ந்து வழமையான பாதைக்கே திரும்பினவாம்.

அப்பொழுதுதான் இயற்கையின் அற்புதச் செயற்பாடுகளுள் இதுவும் ஒன்று என்பதை நன்குணர முடிந்தது. எனவே பகுத்தறிவற்ற பறவைகளைப் பார்த்தாவது மக்கள் வாழ்க்கையில் நல்ல ஒழுங்குகளைத் தெரிந்து கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ முயலவேண்டும்.

**நீர்வைமணி**

# ஓராண்டு நிறைவடையும் நிலையிலும் மீளமைப்புப் பணிகள் பூர்த்தியில்லை

## ஐ.நா.சபை கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஆழிப்பேரலை தாக்குதல் நடைபெற்று ஓராண்டு நிறைவடையும் நிலையிலும் இன்னமும் மீளமைப்புப் பணிகள் முழுமையடையவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

ஐ.நா.சபையில் அதிகாரிகள் மிலுன் கோத்தாரி, வால்டெர் கலின் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்து மா சமுத்திரத்தில் ஆழிப்பேரலை தாக்குதல் நடந்து ஓராண்டுகள் முடிவடையும் நிலையிலும் பல நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்களின் இயல்பு வாழ்க்கை மீளமைக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

பாதிக்கப்பட்ட நாடுகளில் இடம்பெயர்ந்தோர் நலன் குறித்து உரிய அக்கறை செலுத்தப்படவில்லை. இன்னமும் தாற்காலிக கொட்டில்களில்தான் பலரும் வாழ்ந்து வருகின்றனர். உரிய மாற்று ஏற்பாடுகள் செய்து தரப்படாத நிலையில் சேதமடைந்த தங்களுடைய வீடுகளுக்கே பலரும் திரும்பும் நிலை ஏற்பட்டுளளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் வாழ்நிலை மிக மோசமாக உள்ளது. எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் அவர்கள் இன்னமும் உள்ளனர்.பாதிப்புகளின் மதிப்பீடு, நிவாரணப் பகிர்வு, மீளமைப்பு விடயங்களில் அரச நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் குற்றம் சுமத்திக் கொண்டு செயலாற்றாமல் உள்ளன.

இருந்தபோதும்,சர்வதேச சமூகமானது பாதிக்கப்பட்டோர் முகம்கொடுக்கும் சவால்களுக்குத் தீர்வு காணப் பெருமளவிலான உதவிகளைச் செய்ய முன்வந்தது.ஆழிப்பேரலை தாக்கத்திலிருந்து தப்பியோர் தங்கியிருக்கும் முகாம்கள் அமைக்கப்பட்ட பகுதி களில் இராணுவத்தினரது நடமாட்டமானது அம் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையை பாதிப்புக்குள்ளாக்கி இருக்கிறது.

தற்காலிக கொட்டில்களில் இன்னமும் பெண்கள் உள்ளிட்டோர் வாழ்ந்து வருவதால் அவர்கள் பாலியல வன்முறைக்குள்ளாவது அதிகரித்து வருகிறது.

தென் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆழிப் பேரலை திருமணங்கள் என்றழைக்கப்படுகின்ற வகையில் உரிய வயது எட்டாத பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது.ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறார் உரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியாவில் தலித்துகள் தாய்லாந்தில் பர்மா அகதிகள் இலங்கையில் தமிழ், முஸ்லிம்கள் சில குழுக்களினதும் செயற்பாடுகளால் வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய துன்பத்துக்கு மீண்டும் ஆளாகி இருப்பது கவலையளிக்கிறது.கடலோரப் பிரதேசங்களிலிருந்து மீனவர்கள் வெகு தொலைவில் குடியமர்த்தப்படுவதால் அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை தாக்குதலின் ஓராண்டு முடிவில் இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை, மாலைதீவுகள, தாய்லாந்து,சோமாலியா ஆகிய நாடுகளில் மீளமைப்புப் பணிகளுக்கான சர்வதேச உதவிகள் மேலும் கையளிக்கப்படும்.உரிய நாடுகள் மீளமைப்புப் பணிகளில் முழுக் கவனமெடுக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# விவசாய அமைச்சுக்களை ஒன்றாக இணைக்க ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்தில் விவசாயம் மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பிலான விடயங்களுக்காக மூன்று அமைச்சுக்கள் ஏன் தனித்தனியாக இயங்க வேண்டும் என்று ஜே.வி.பி கேள்வி எழுப்பியுள்ளது.

நாடாளுமன்றில் ஜே.வி.பி. எம்.பி. அனுர குமார திஸநாயக்க நேற்றுமுன்தினம் பேசுகையில்,

மஹிந்த ராஜபக்ஷவினது அரசாங்கத்தில் விவசாய செயறபாடுகளுக்காக 3 அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மைத்திரிபால சிறிசேன, சமல் ராஜபக்ஷ, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் விவசாயத்துக்கான அமைச்சர்களாக உள்ளனர்.

ஏன் ஒரே அமைச்சாக இவற்றை இணைக்கக் கூடாது? மூன்று அமைச்சுக்களையும் ஒரே அமைச்சாக இணைக்க வேண்டும். அப்போது தான் அரசாங்கத்தின் விவசாயக் கொள்கையில் எதுவித குழப்பமும் ஏற்படாது.

350 ரூபாவுக்கு உரம் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட திட்டம் முறையாகச் செயற்படுத்தப்படவில்லை. இந்தத் திட்டத்தில் முறைகேடுகள் நடந்து வருகின்றன என்று குற்றம்சாட்டினார்.

ஜே.வி.பி. எம்.பி. சந்திரனே விஜேசிங்க அங்கு பேசுகையில்,

வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியமான அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெறுகின்றது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆசனங்கள் வெறுமையாக உள்ளன. அவர்கள் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஆனால், அரச தரப்பிலும் ஆசனங்கள் வெறுமையாக உள்ளன. ஒரு சில அமைச்சர்களைத் தவிர மற்றையவர்களைக் காணவில்லை. போட்டி போட்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தச் சபைக்கு வருவதில்லை. அதிக அமைச்சுக்களை வைத்துள்ள அரசாங்கத்திற்கு வரவு-செலவுத்திட்டத்தில் கலந்துகொள்ள அமைச்சர்கள் இல்லை.

அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என நாங்கள் பல தடவை சுட்டிக்காட்டியுள்ளோம். ஆனாலும் இதுவரை எந்தவொரு அமைச்சர்களும் தாமாக முன்வந்து பதவி விலகவில்லை.

மேலதிக அமைச்சர்கள் பதவிலக வேண்டும் என்று நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இது விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ கவனம் எடுக்க வேண்டும்.

அமைச்சர்களின் அலுவலகப் பொறுப்புக்களில் அமைச்சர்களின் உறவினர்கள் சிலர் கடமைபுரிகின்றனர்.அது தவிர்க்கப்பட வேண்டும்.முன்னைய அரசாங்கம் விட்ட தவறை இந்த அரசாங்கமும் செய்யக் கூடாது என்றார். (ற)

# புங்குடுதீவு படுகொலையை ஆராய இரு நீதிபதிகள் குழு நியமனம்

(கொழும்பு)

புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இளைய தம்பி தர்சினியின் கொலைச் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு இரண்டு நீதிபதிகள் அடங்கிய குழுவொன்றை விரைவில் ஜனாதிபதி நியமிக்கவுள்ளதாக பிரதமரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் நிறைவில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவில் இளம்பெண் ஒருவர் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும், இதில் கடற்படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸ் அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். இந்த அறிக்கை கிடைத்தவுடன் உயர்நீதிமன்ற நீதிபதி ஜயவிக்கிரமவும், மற்றொரு நீதிபதியும் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படும்.

மேலும், இந்தக்குழு பூரண விசாரணைகளை ஆரம்பித்து அறிக்கையினை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும். அதன் பின்னர் ஜனாதிபதி அது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பார். நாம் கொலைகளைக் கண்டிக்கின்றோம்.அதேவேளை அங்கு இடம்பெறும் வன்முறைகள் தொடர்பாகவும் கவலை கொண்டுள்ளோம் எனவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார். (ற)



தென்மராட்சி கல்வி வலயத்தினரால் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட இடைநிலை மாணவர்களது கல்விக் கண்காட்சியை வைத்திய கலாநிதி அம்பிகைபாகன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன் மாணவர்களது ஆக்கங்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி நிருபர்)

# இதுவரை யாழில் யுத்தம் இனி கொழும்பில் போர்

## -'குமுதம்- ரிப்போட்டர்' இதழ் கட்டுரையில் தமிழக மூத்த ஊடகவியலாளர் சோலை



**ஈழத்தமிழரின் சாதாரண உரிமைகளைக் கூட மறுப்பவர் மஹிந்த ராஜபக்ஷ. இனி யுத் தம் நடந்தால் அது யாழ்ப்பாணத்தில் அல்ல- கொழும்பில் தான் நடக்கும் என்று தமிழ் நாட்டின் மூத்த ஊடகவியலாளரும் மறைந்த முதல்வர் எம். ஜி. ஆரின் அரசியல் ஆலோசகராகச் செயற்பட்டவருமான சோலை கருத்துத் தெரிவித்துள்ளார்.**

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் குமுதம் இதழின் வாரமிருமுறை இத ழான ரிப்போட்டர் இதழில் சோலை எழுதி யுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள் ளது.

அக்கட்டுரையில் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது,

இலங்கையில் மீண்டும் போர் மேகங்கள் திரள்கின்றன. ஈழத்தமிழர்களின் சாதாரண உரிமைகளைக்கூட அடியோடு மறுக்கும் சக் திகளின பிரதிநிதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதி பதியாக வெற்றி பெற்றிருக்கிறார்.

### தமிழர்களின் தேர்தல் புறக்கணிப்பு

சந்திரிகாவின் சுதந்திரக் கட்சி வேட்பா ளர் மஹிந்த ராஜபக்ஷ அவரை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டார். முன்னவர் ஒரு இலட்சம் வாக்குகள்தான் கூடுதலாகப் பெற்றி ருக்கிறார். நாடு தழுவிய அளவில் நடந்த தேர்தலில் ஒரு இலட்சம் என்பது பெரிய வேறுபாடல்ல.

இந்தத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் வாக் களிக்கவில்லை. முப்பது இலட்சம் பேரில் நூற்றுக்கணக்கில்தான் வாக்குச் சாவடிக ளுக்குச் சென்றதாக செய்திகள் வந்தன.

நாடாளுமன்ற தேர்தல் என்றால் அவர் கள் ஆர்வமுடன் வாக்களிக்க வருவர்.தமிழர் இயக்கங்களின் தங்கள் பிரதிநிதிகள் வெற்றிபெற வேண்டும் என்று அவர்கள் விரும்புவர்.

சிங்களவர் ஒருவர்தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியும்.அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் இனவாதம் என்று வரும் போது ஈழத்திலிருந்து தனியாகத் தங்களுக்கு எல்லைக்கோடு போட்டுக்கொள் வார்கள். நடந்து முடிந்த தேர்தலில் தமிழர் பகுதிகளுக்கு வந்து ரணில் விக்கிரம சிங்க கூட வாக்குக் கேட்க வில்லை. காரணம் சிங்களவர்களின் சீற்றத் திற்கும் புத்தத் துறவிகளின் அக்கினிக் கண் களுக்கும் ஆளாக வேண்டும் என்று ரணில் அச்சம் கொண்டர்.

### குண்டுகள் மட்டுமல்ல வெண்புறாவும்

போர்முனையில் நின்ற ஈழத் தமிழர்கள் சமாதானத்திற்கும் தயாராக இருந்தனர். அவர் கள் தூக்கிய துப்பாக்கியில் குண்டு மட்டு மல்ல வெண்புறாவும் கூடு கட்டி இருக்கிறது. எனவே தான் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வே எடுத்த முயற்சியின் காரணமாகப் போர் நிறுத்தம் செய்தனர். அப்போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். அவரே போர் நிறுத்த உடன்பாட்டில் அரசு சார்பாக கையெழுத் திட்டார். அவரிடமிருந்து ஈழத் தமிழர்கள் நிறைய எதிர்பார்த்தனர்.

ஈழத் தமிழர்களின் வடக்கு,கிழக்கு மாகா ணத்தில் பாடசாலைகள்,ஆலயங்கள்,மாதா கோயில்கள் ஆகியவற்றில் இன்றைக்கும் இராணுவ முகாம்கள் உண்டு. அந்த முகாம் களை மூடி இராணுவத்தை அதன் முகா முக்கு அனுப்புவது என்பது உடன்பாட்டில் ஓர் அம்சம். ஆனால் அந்தச் சாதாரண கோரிக்கை கூடச் செயலுக்கு வரவில்லை அங்கிருந்து இராணு வம் வெளியேற மறுக்கிறது என்றார் ரணில்.

### இராணுவம் நவீனமயம்

தற்போது தங்களிடம் நவீன ஆயுதங் கள் இருப்பதாக இலங்கையின் புதிய இரா ணுவத் தளபதி கூறுகிறார். இதன் பொருள் என்ன? போர் நிறுத்த காலத்தில் இலங்கை அரசு தமது இராணுவத்தை நவீனப்படுத்தி விட்டது. நாசகார ஆயுதங்களை வாங்கிக் குவித்து விட்டது என்றுதான் அர்த்தம்.

இலங்கை அரசியல் திசையைத் தீர் மானிப்பது ஜனாதிபதியோ பிரதமரோ அல்ல. இராணுவம் தான்.அதனால்தான் அமைதி உடன்பாட்டையே குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்தது. அந்த இராணுவத்தில் ஈழத் தமிழர்கள் எந்தப் பொறுப்பிற்கும் வர முடியாது. தமது பராக்கிரமத்தைக் காட்ட ஈழத்தை இலங்கை இராணுவம் மயான பூமியாகப் பயன்படுத்திக்கொள்ளும்.

வழியில் போகின்றவனை 'அண்ணா' என்று அழைத்தானாம் ஒருவன். ஏண்டா மடையா! என்னோடா பிறந்தாய்? முட் டாள் என்றானாம் வழிப்போக்கன்.அப் படித் தான் ஈழத்தமிழர்களை சிங்கள இனவாதிகள் பார்க்கிறார்கள்.

### சூரியனுக்கு பனிக்கட்டி சவால்

அந்த இராணுவத்திற்கு இசைவான ஓர் அரசு இப்போது அமைந்திருக்கிறது. ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் முதல் உரை நிகழ்த்தினார்.

இலங்கை் அரசு,சிங்கள இனவாதப் பேரரசுதான் என்பதனை அவர் தெளிவாக அறிவித்தார். இதுவரை சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஈழத் தமிழர்களுக்கு அளித்த உறுதிமொழியையும் உதறித் தள்ளினார்.

இலங்கைக்கு சிங்களவர்களின் ஒற்றை ஆட்சிதான் கூட்டாட்சி என்பது இல்லை என் றார்.ஈழத்தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார். இது ஈழ மக்களுக்கு விடுத்த போர் பிரகடனமாகும். இந்தப் பிரகடனம் கேட்டு ஈழத்தமிழர்கள் அதிர்ச்சியடையவுமில்லை. வியப்படையவுமில்லை. சிங்கள இனவாதிகள் தங்களுக்கு எந்த உரிமையும் தரமாட்டார் கள் என்பது அவர்களுக்குத் தெரியும். உரிமையைப் போராடித்தான் பெறமுடியும் என்பதனை அவாகள் அறிவார்கள்.

ஆனால் இலங்கை அரசுடன் ஏன் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டார் கள்? தங்கள் விடுதலை இயக்கத்திற்கு சர்வதேச அரசியல் அங்கீகாரம் கிடைக்க வேணடும் என்று எதிர்பார்த்தார்கள்.உரிமைகளை அவர்கள் பெற முடியவில்லை யென்றாலும் உலக அரங்கில் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது. கொரில்லாப் போருக்கு மட்டுமல்ல சமாதானத்திற்கும் தயார் என்பதனை அவர்கள் உலகிற்கு உணர்த்தி விட்டார்கள்.

சமரசத்திற்கோ, சமாதானத்திற்கோ, உடன்பாட்டிற்கோ தயாராக இல்லை என்ப தனை ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். அதே சமயத்தில் இனி எந்தத் தாக்குதலையும் இராணுவம் எதிர்கொள்ளும் என்றும் இலங்கையின புதிய தளபதி சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார். சூரியனுக்குப் பனிக் கட்டிகள் சவால்.

நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய முதல் உரையில் ராஜபக்ஷ ஓர் நச்சுக் கருத்தை நட்டு இலங்கைச் சூழலுக்குள் இந்தி யாவை இழுத்திருக்கிறார். என்ன சொல்கிறார்?

ஐ.நா. மன்றத்தின் உதவியோடு ஈழப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா உதவ வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத் திருக்கிறார்.வேடிக்கை.

### பொறுமையின் பெட்டகமாக ஈழமக்கள்

நோர்வே நாட்டின் முன் முயற்சியால ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழீழ விடு தலைப்புலிகள் இயக்கம் உடன்பாடு கண்டது. அதன் பின்னர் சந்திரிகாவுடன் உடன்பாடு கண்டது. இந்த உடன்பாடுகளை இலங்கை அரசு செயல்படுத்த வில்லை. ஆனால் ஈழமக்கள் பொறுமையின பெட்ட கமாக இருந்தனர்.

இப போது இந்தியாவை ஏன் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக் கிறாா? அதன் மூலம் ஈழ மக்களை அவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார். அந்தக் கூண்டில் நிற்க வேண்டியது இலங்கை இனவாத அரசுதான். உலகம் அறிய நடு நிலை நாடான நோர்வேயின் முன்னிலையில் கையெழுத்திட்ட இரண்டு உடன்பாடுகளையும் எட்டிக்காயாச ் கருதியது அந்த அரசுதான்.

எந்தக்காரணம் கொண்டும் எந்தச் சூழ் நிலையிலும் ஈழத் தமிழர்களை இலங் கையின மைந்தர்களாக சிங்கள இனவா தம் ஏற்றுக்கொள்ளாது. அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகத்தான் கருதுகிறது. இனியும் கருதும். போராடித்தான் தங்கள் நியா யத்தை, உரிமையை நிலை நாட்ட முடியும் என்ற நிலைக்கு ஈழத்து மக்களைத் தள்ளுவது சிங்கள இனவா தம் தான். அவர்கள் மகா வம்சப் பரம்பரை யினராம். புத்த புராணங்க ளில் ஆதாரங்களைத் தேடுகிறார்கள். ஈழத் தமிழர்கள் நசுக்கப்படவேண்டிய பொட்டுப் பூச்சிகளாம்.

இந்த முருங்கைப் பந்தலில் நின்று எதற் காக இந்தியாவின் உதவியை நாடுகிறார் கள்?

### மங்களவின் இந்தியப் பயணம்

இலங்கையின் புதிய வெளியுறவு அமைச சராக மங்கள சமரவீர பொறுப்பேற்றி ருக்கிறார். அண்மையில் அவர் டெல்லி வந்தார். பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார்.

ஈழப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணப் புதிய அரசு தயாராக இருப்பதாகப் பிரதமரிடம் தொிவித்தார். அந்தப் பேசசு வார்த்தை திறந்த மனதுடன் நடைபெற வேண்டும் என்று புதிய ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்புவதாகவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்து டன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத் தியது.அதன் முடிவு களை அதன் இராணு வமே புதைகுழிக்கு அனுப்பியது. இது வரலாறு.

இப்போது மீண்டும் பேச்சுவார்த்தை என்று மங்கள சமரவீர புதிய திரை விரிக்கிறார். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ வின் நாடாளுமன்ற உரை யில் அதற்கான அறிகுறியே இல்லை. ஈழப்பிரச் சினைக்குத் தீர்வுகாணும முறையில் ராஜபக்ஷவின் உரை அமைய விலலை. போருக்குத் தயார் என்று புதிய இராணுவத் தளபதி அறிவித்திருக்கிறார்.

### இந்தியாவின் நிலைப்பாடு

ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாட்சி மூலம் தான் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பது இந்திய அரசின் நிலைப்பாடு. வாஜ்பாய் வகுத்த இந்தக் கொள்கைகளை பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இலங்கையில் ஒற்றையாட்சி தான்.கூட்டாட்சி இல்லை என்று நாடாளு மன்றத்தில மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள ளார். பின்னர் எந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை நடைபெற முடியும்?

இலங்கையில் போர் நிறுத்தம் நீடிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் சம்மட்டி அடியாகத் தெரிவித்திருக்கிறார். வரவேற்கத்தக்கது.

கூடடாட்சி அடிப்படையில் தீர்வு என்பதனை இலங்கை அரசு ஏற்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் உரை திருத்தப்பட வேண்டும். அதுவரை இலங்கை அரசுடன் இந்தியா எந்த உடன்பாடும் செய்து கொள்ளக் கூடாது.

ஏனெனில் ஈழப் பிரச்சினை என்பது முப் பது இலட்சம் தமிழர்களின் வாழ்வுரிமைப பிரச் சினை. அவர்களுடைய அரசியல் உரிமைகள், பணபாடு காக்கப்படவேண்டும் என்பதில் ஆறு கோடித் தமிழர்கள் கவலை கொண்டுள்ளனர்.

யுத்தம் என்றால் இதுவரை யாழ்ப்பாணததில நடந்தது. இனி போர் என்றால் கொழும்பிததான் நடைபெறும் என்று சோலை அதில தெரி வித்துள்ளார். (ற)

# யாழ். பல்கலைக்கழக சூழலில் இருந்து இராணுவத்தினரை உடன் அகற்றுக!

## கனேடிய மாணவர் சம்மேளனம் மஹிந்தவுக்கு மகஜர்

(ஒன்ராரியோ)

யாழ்.பல்கலைக்கழக சூழலில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரை உடன் அகற் றுமாறு கோரி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கனேடிய மாணவர் சம்மேளனத்தின் சாாபில் அதன் ஒன்ராரியோ மாநில பிரதிநிதி அவசர கடிதமொனறை அனுப்பிவைத்துள்ளார்.

ஒன்ராறியோ மாநிலத்தின் இரண்டு இலட சத்து 50 ஆயிரம் மாணவர்களை பிரதித் து வபபடுத்தும்பிரதிநிதி ஜெசி கிரேணர் என் பவரே இக்கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளார்.

கனேடியப் பிரதமர் போல் மாட்டின் மற் றும் நோர்வே பிரதமர் ஜேன்ஸ் ஸ்ரொட் ல்ன்பேர்க் ஆகியோருக்கும் நகல் செய்யப்பட்டு அனுப் பப்பட்டுளள அக் கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள் மீது ஒரு அமைதியான போராட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்த எமது கரிசனையை உங்களுக்கு தெரி விக்கின்றோம். மேலும் யாழ். மாணவர் அலுவலகங்கள் கடந்த இரண்டு வாரங் களாக இராணுவ கண்காணிப்புக்கு உள ளாக்கப்பட்டுளளதாகவும் பல மாணர்கள் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு அவாகளின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டதாக வும் அறிகின்றோம்.

கருத்துக்களைச் சுதந்திரமாக வெளி யிடுவது அடிப்படை மனித உரிமை. மாண வர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான பாது காப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் யாழ். பல்கலைக்கழக சூழலை விட்டு இராணுவத்தை உடன் அகற்றுவது மட்டுமன்றி கல்வி கற்று லுக்கான மாணவர்களின் அனைத்து தேவை களையும் உடன்பூர்த்தி செய்யுமாறும் உங்களை வேண்டு கின்றோம். பெரும்பான் மையாக தமிழ் மாண வர்களைக் கொண்ட வவுனியா பல்கலைக்கழக மாணவர் சமூகத் தின் பலவேறு தேவைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படா மையையும் சுட்டிக்காட்ட விரும் புகின்றோம்.

வட பகுதி மாணவர்கள் மீது தொடரும வன்முறைகள் குறித்து வெளியாகும் செய் திகள் அனைத்தும் உண்மையானால் அதன் பால் அனைத்துலக கவனம் திருபபபபட வேணடியது அவசியம் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னரும் யாழ். பலகலைக்கழக சமூகத்தின் மீது இராணுவ நெருககுவாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால நெருக்குவாரங்கள் தணிந்து புரிந்துணர்வு வரும் என்று எதிர்பார்த்த எங்களுக்கு தற் போது வரும் செய்திகள் ஏமாற்றம் அளிப்பதா கவுள்ளது. இது குறித்து உங்கள் அரசின வன் முறைகளை நிறுத்துவதற்கான உறுதியான நடவடிககைகளையும் வேண்டி நிற்கின்றோம எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய மாணவர் சம்மேளனம், கனடாவில் உள்ள மாணவர்கள் அனைவரையும் அதன் 10 மாநிலங்களிலும் பிரிதிநிதித்துவப் படுததும் ஒரே ஒரு அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## க.பொ.த (சா/த)

# பரீட்சை மோசடிகள் குறித்த விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இடம்பெற்றுள்ள மோச்டிகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகள் உட்பட 15பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கொழும்பு, இரத்தினபுரி, அனுராதபுரம், ஆனைமடுவ மற்றும் தம்புள்ள போன்ற பிரதேசங்களில் சேவையில் ஈடுபட்டவர்களே விசாரணைக்கு உட்டுபத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்று பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சையில் ஆள் மாறட்டம் செய்த 8 மாணவர்கள் மீதும் பரீட்சைத்திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இவர்களுள் 4 பேர் பாரிய மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பரீட சைத் திணைக்களத்தால் பரீட்சை எழுதத் தடை செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலில் மோசடியில் ஈடுபட்ட மாணவர்களின் பெயர்களும் இடம்பெறச் செய்யவுள்ளதாகவும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-9)

# பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தொலைபேசி வழங்க அங்கீகாரம்

(கொழும்பு)

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தொலைபேசி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தற்போது பிரதேச சபையின் தலைவர், மற்றும் உபதலைவருக்கு மாத்திரம் இந்த வசதி வழங்கப்படுகின்றது.

அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சமர்ப்பித்த பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதால் 266 பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் தொலைபேசி வசதி கிடைக்கவுள்ளது.

மாநகர சபை மற்றும் நகர சபை சட்டத்திற்கு அமையவே இந்தச் சலுகை வழங்கப்படுகின்றது.

புதிய தீர்மானத்திற்கு ஏற்ப பிரதேச சபை உறுப்பினர்கள் 4 ஆயிரம் பேர் இந்த வசதியைப் பெறவுள்ளனர்.

ஏற்கனவே தொலைபேசி இணைப்புப் பெற்றுள்ள பிரதேச சபை உறுப்பினர்களுக்கு புதிய சலுகைக் கட்டணம் அந்த மாகாண சபை ஆளுனரினால் தீர்மானிக்கப்படவுள்ளன. (ரு-9,7)

# மலசலகூடங்கள் அமைப்பு

(பொன்னாலை)

வலி மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி மத்தி, அராலி மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு யுனிசெப் நிறுவனத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மலசலகூட நிர்மாணிப்பு வேலைகள் முற்றுப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் தலா 10 மலசலகூடங்கள் வீதம் 20 மலசல கூடங்களை யுனிசெப் நிறுவனம் வழங்கியிருந்தது.

ஒவ்வொரு மலசல கூடத்திற்குமான பெறுமதி 70 ஆயிரம் ரூபா என்றும், இதில் 10 ஆயிரம் ரூபாவை மக்கள் கொடுக்க வேண்டும் என்றும் மீதி 60 ஆயிரம் ரூபாவை யுனிசெப் நிறுவனம் பொருட்களாகவும் பணமாகவும் வழங்கியிருந்தது என்றும் வலி - மேற்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-49)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பாண்ட் வாத்திய அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அவ் அணியினர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.அம்பலவாணர், அதிபர் ஆர்.இராகவன் மற்றும் ஆசிரியைகளுடன் காணப்படுகின்றனர். (படம் - பரு.நிருபர்)



கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் காணப்பட்ட சுமார் நான்கரை அடி நீளமான ஒருவகை மலைப்பாம்பை அப்பகுதி மக்கள் பிடித்தனர்! சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

இலந்தைக்குளம் வீதியிலுள்ள வாய்க்காலில் இருந்து வந்ததாக கருதப்படும் மேற்படி பாம்பை பிடித்து அப்பகுதி மக்கள் அப் பாம்மை அடித்துப் புதைத்தனர். புதைத்த பாம்பை குழிதோண்டிப் பார்த்த போது அங்கே பாம்பைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், அரியாலைப் பகுதிகளில் இத்தகைய பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பாம்புகளின் இரைச்சல் சத்தம் 'காற்று அடிப்பது போல' விட்டு விட்டுக் கேட்டதாகவும் மேற்படி பாம்பை பிடித்து அடித்தவர்கள் தெரிவிக்கின்றனர். (படம் - சுஜீந்திரன்)

## குளம் புனரமைப்பு

(பொன்னாலை)

அராலி மத்தி - குழக்கன் குளம் மண் அணைக்கட்டு கட்டிப் புனரமைக்கட்டுள்ளது. இப்புனரமைப்பு வேலைகளுக்கு யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கடு செய்து வழங்கியிருந்தது.

கடந்த 50 வருடத்திற்கும் மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாதிருந்த இந்தக் குளத்தை அணைக்கட்டுக் கட்டிப் புனரமைத்துத் தருமாறு; சங்கானைப் பிரதேச செயலரிடம் அப்பகுதி மக்கள் பல வருடங்களாகக் கோரிக்கை விடுத்துவந்தனர்.

எனினும், தற்போது பதவியிலுள்ள சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸின் பெருமுயற்சியின் பலனாக இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-49)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஆங்கில மொழிமூலம் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளினாலும் அனுபவம் மிக்க ஆளணியினாலும் நடத்தப்படவுளளது.

இச் செயல்மர்வில் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்க நியமிக்கப்பட்ட ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (அ)

## திறப்பு விழா

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புனர் நிர்மாணிக்கப்பட்ட மகப்பேற்று விடுதி மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை இதனை வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளரும் கலந்து கொள்ளவுள்ளார்.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவையொட்டி ஏ.எஸ்.பி.போர்ததுகல் நிறுவனத்தின் அனுசரணையுடன் மகப்பேற்று விடுதி அறை, அவசர சிகிச்சைப்பிரிவு, சத்திரசிகிச்சை கூடம், இரத்தவங்கி ஆகியவற்றை புனர்நிர்மாணம் செயவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (ரு-35)

## கண்காட்சி

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்று வந்த பரிசாரகருக்கான மூன்றாவது அணியின் பயிற்சி மாணவர்களின் கண்கர்ட்சி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நோய் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்கள் என்பவற்றை கண்காட்சி மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் பரிசாரருக்கான பயிற்சி வகுப்புக்கள் மூன்று அணிகளாக நடைபெற்றன. இதில் கடைசி அணி இம் மாதத்துடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-35)

## மாடுகளால் விபத்து ஒருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் வரும் போது மூன்று மாடுகள் குறுக்கே சென்றதால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் இயக்கச்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதனால் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற புலோப்பளையைச் சேர்ந்த கந்தசாமி ஈஸ்வரன் என்பவர் உடல் முழுவதும் பலத்த காயங்களுக்கு உள்ளனார்.இவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளார். (ரு-108)

## வலம்புரியின் ஆறாவது அகவை நிறைவு

### அன்னதானச் சோறு

அம்மன் கோவிலில் அன்னதானமாம்
எம்புட்டுச் சந்தோசம் அவளுக்கு
நித்தம் கஞ்சி கூழ் குடிச்சவள்
சோறல்லே சாப்பிடப் போறாள்
ஒலி பெருக்கீல சொன்னவ
கனடாக்காரர் குடுக்கீனுமாம்
மகனை அனுப்பிவிட்டு
காத்துக்கொண்டிருக்கிறாள் சோற்றுக்காக
பூசை முடிந்துவிட்டது
மண்டபமும் நிறைந்துவிட்டது
வந்த முழுச்சனமும் உபயகாரர்
சொந்தக் காறர்களாம்
வீட்டுக்கும் கொண்டுபோக
அவர்களிடம் பைகளும் இருந்தன
கண்களில் பயம் கௌவ
கரிய உருவ மொன்று
மெல்ல நகர்ந்து வருகிறது
அவள் மகன் சின்னையா தான்
காற் சட்டை இடுப்பிலே
நிற்க மறுக்கிறது
வறுமையில் மெலிந்தான் போலும்
அப்பனோ குடிகாறன்
செத்தும் விட்டான்
மூன்று மாதம் தான்
வந்தவன் ஓரமாய் குந்துகிறான் பந்தியிலே
பலநாள் பசியை ஒரே நாளில் தீர்ப்பதற்காய்
சோறு போட்டுவிட்டனர்
கறி வருமுன்பே அவன்
உண்ணத் தொடங்கிவிட்டான்
கறிகொண்டுவந்தவன்
கண்டுவிட்டான் - இவன்
குடிகாறன் மகனிற்கு
சோறு ஆர் போட்டதென்றான்
அப்பன் தப்பு இங்கு
மகனுக்கு பெயராகிவிட்டதே
இவன் என்ன குற்றம் செய்தான்
வெளியே கலை என்றான் ஓரான்
சாதி விசாரித்தான் மற்றோராள்
சோற்றை பறி என்றான் இன்னொராள்
சாமிக்குற்ற மென்றான் மற்றோரான்
பிச்சை நாய் என்றான் ஒருத்தன்
கோயிலுக்குள் இவனை
விட்டது யார் என்றான் இன்னொருவன்
அம்பட்டு சனமும் வேடிக்கைதான்
பார்த்துக்கொண்டிருந்து
காற்சட்டையை ஓர் கையால் பிடித்து
கறி இல்லா சோற்றோடும்
பாதிப்பசியோடும் எழுந்தவன்
கெஞ்சினான் தாய் பசி என்று
பாவம் என்றான் அப்பொழுது
ஒருவன் - மற்றொருவன்
கொடுத்து விடலாமென்றான்
நாய்க்குக் கொடுத்தாலும்...
என்றான் இன்னொருவன்
சோற்றைப் பறித்தான் ஒருவன்
தாயின் பசியை எண்ணியவன்
காற்சட்டைடை பிடித்த கையை
விட்டு சோற்றை பறித்தபோது
காற்சட்டை மெல்ல நழுவ
சோறும் கொட்டிவிட்டது
எல்லோரும் பெரிதாய் சிரித்தனர்
ஏதோ சாதித்து விட்டதாய்
அவனும் மனிதன் தானே
ஏழைக்குத் தானே அன்னதானம்
பசியோடு வாடும் தாயின் முகம் கண்ணிலே வந்து போக
அவமானம் தாங்காதவனாய்
கறிவாளியை எடுத்து ஊற்றி விட்டான்
அவர்கள் முகமெல்லாம்
சபையே ஒரு கணம் திகைத்து
பின் ஆரவாரப்பட
மெல்ல நடக்கிறான் வீடுநோக்கி
பணத்திமிர் கொண்டு
தாண்டவமாடிய சிலரின் மூஞ்சியில்
கரி பூசாவிடினும்
கறி ஊத்திய திருப்தியோடு

ஸ்ரீராம், கோண்டாவில்.

# காலத்தை வென்ற

## எம்.ஜி.ஆரின் நினைவு தினம் இன்று

அந்த மூன்று எழுத்து ஒரு காலத்தில தமிழக மக்களின் மூச்சுக்காற்றாக இருந்தது. அந்த மூன்றெழுத்தின் நா அசைந்தால் நாடே அசைந்தது. அன்பாலும், பண்பாலும், இனிய அரவணைப்பாலும் அள்ளிக்கொடுக கும் வள்ளல் தன்மையாலும் தமிழக மக்களின் இதயத்தில் இடம்பெற்றிருந்தது அந்த மூன்றெழுத்து.

'எம்.ஜி.ஆர்'! இந்த மூன்றெழுத்துக்குரியவரான எம்.ஜி.இராமச்சந்திரன் சாதாரண துணை நடிகராகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்து, தமிழகத்தின் முதல்வராக உயர்ந்தவர். இல்லை என்று வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வாரி வாரிக் கொடுத்த வள்ளல் அவர். இலங்கையிலே பிறந்த காரணத்தினாலோ என்னமோ ஈழத் தமிழர் பிரச்சினையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக, சொல்லாலும் செயலாலும் வாரிக்கொடுக்கும் வள்ளல் தன்மையாலும் ஈழத்தமிழர் போராட்டததிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவியவர் அவர். அவர் முதல்வராக இருந்த நேரத்தில தமிழக சட்டசபையே தமிழீழப் போராட்டத்துக்கு கோடிக்கணக்கான ரூபாவை உதவிப் பணமாக வழங்கத் தீர்மானம் நிறைவேற்றி உதவியும் இருக்கிறது.

17.10.1917 ஆம் ஆண்டு இலங்கையில் கணடி மாநகரில் பிறந்த இவர் சிறுவயதிலேயே தாயகம் சென்று விட்டார். செல்வச் சிறப்புக் குறைந்த குடும்பத்திலே பிறந்த இவரும் இவரது சகோதரர் சக்ரபாணியும் சிறுவயதிலேயே நாடகக் கம்பனிகளில் இணைந்து படிப்படியாக முன்னேறி நடிப்புலகில் தமக்கென ஓரிடத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

நடிப்புலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இவர் உலகெல்லாம் பரந்தும் செறிந்தும் வாழும் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஒப்பற்ற தலைவனாக இடம் பிடித்துள்ளார்.

சினிமா துறையில் பல புரட்சிகளை ஏற்படுத்தி, மூட நம்பிக்கை போன்ற மூடப்பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறிந்து 'புரட்சிக் கலைஞர்' என்ற பட்டததுடன் பவனி வந்தார்.

அறிஞர் அண்ணாவின் ஆளுமையினால் கவரப்பட்ட இவர், அண்ணாவின் அரவணைப்பிலே அவரது அருமைத் தம்பியாக வளர்ந்தார். அவருடைய பெயருக்காகவே நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிமுரசு கொட்டிய திரைப்படங்களுக்கு எண்ணிக்கை இல்லை.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் கண்டவர் அவர். மழைக் காலங்களில் மழையிலே நனைந்தபடி தொழில் செய்யும் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு மழை அங்கியும், தொப்பியும் வழங்கியதன் மூலம் தனது பொதுப்பணியை ஆரம்பித்த இவர் தனது இறுதிக்காலம் வரை ஏழை மக்களுக்கு தமது உழைப்பால் கிடைக்கும் பணத்தை எல்லாம் வாரி வழங்கினார். அவரது தன்னலமற்ற சமூகப்பணி அவரை மெல்ல மெல்ல அரசியலுக்குள் இழுத்தது. அண்ணாவின் மறைவுக்குப்பின் முழுநேர அரசியலவாதியாக மலர்ந்த இவர் தடைகள் பலவற்றைத் தாண்டி தமிழகத்தின் முதல்வரானது எவருமே எதிர்பார்த்திராத திருப்புமுனை.

ஈழத்தமிழர் போராட்டத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து, முதன்முதலாக அதற்கு ஆதரவாகக் குரல்கொடுத்தது மாத்திரமல்ல- பலவழிகளிலும் பலவகையான உதவிகளைச் செய்து வந்ததை ஈழத் தமிழ் மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்.



# கருணை வள்ளல்

1985-87 காலப்பகுதியில் பேரினவாதிகளின் நடவடிக்கையால் புலம்பெயர்ந்து தமிழ் நாடு சென்ற ஈழத்தமிழர்கள், அங்கு காலூன்றி நல்லதொரு வாழ்வை அமைத்துக்கொள்ள வழிவகுத்துக்கொடுத்தார்.

பொன்மனச் செல்வர், புரட்சித் தலைவா, மக்கள் திலகம், கலையுலக மன்னன், நிருத்திய சக்கரவர்த்தி முதலிய பல பட்டங்களுடன் இந்திய அரசின் அதி உயர் பட்டமான "பாரத ரத்னா" பட்டமும் இவரை வந்தடைந்தது.

24.12.1987ஆம் ஆண்டு இவரது இறுதி மூச்சு நிற்கும் வரை மக்கள் சேவையை மகேஸ்வரன் சேவையாகச் செய்துவந்த இவரது மறைவு தமிழக மக்களுக்கு மாத திரமல்ல, உலகில் பல பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்தநேரத்தில இவர் சிறுநீரக நோயினால் பாதிககப்பட்டு படுத்த படுக்கையாக கிடந்த நிலை மாத்திரம் ஏற்படாமலிருந்தால, அப்படையின் அட்டூழியம் அரங்கேறியிருக்கமாட்டாது என்றும், தமிழழப் போராட்டத்தின் திசையே மாறி இருக்கும் என்றும் இன்றும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

மறைந்தும் மறையாத புகழ் பூத்த குணக் குன்றின் பெயர் 'என்றுமுள தென்மொழி' உள்ளவரை இருக்கும் என்பதில் ஐயமில்லை.

செ.ரூபன்

## அவசரகாலச் சட்டம் தமிழர்களின் அவமானச் சின்னம்

# சகல சிறுபான்மை அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றில் பலம்மிக்க அணியாக செயற்பட வேண்டும்

## - சு.ப.தமிழ்ச் செல்வனுடனான சந்திப்பின் பின் மனோகணசன்

(கிளிநொச்சி)

**அரசாங்கம் தொர்டர்ந்தும் நீடித்துவரும் அவசரகாலச் சட்டமானது தமிழ் மக்களின் அவமானச் சின்னமாகும் என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அவர் அளிதத செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த செவ்வியின் விபரம் வருமாறு,

**கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக...?**

பதில்: இன்றைய சந்திப்பு காத்திரமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. புதிதாக பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபகஷ அரசாங்கம் பற்றிய பார்வை எப்படியுள்ளது என்பதை தெரிந்துகொள்வதற்காக எமது பயணம் அமைந்திருந்தது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உத் தேச பேச்சுவார்த்தையானது தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக வைத்து அதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெறும் என்பதை தமிழ்ச்செல்வன் எமக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் வடக்கு- கிழக்கு சார்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று செயற்படடுக்கொண்டு இருக்கும் கட்சிகள் இதைத தவிர, வடக்கு- கிழக்குக்கு வெளியே எங்களின் மேலக மக்கள் முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய அனைத்து கட்சிகளும் ஒருசேர செயற்பட்டு பாராளுமன்றத்திலேயே ஒருபலம் மிக்க அரசியல் பேரம் பேசக்கூடிய அணியாக செயற்படவேண்டும் என்ற அடிப்படையில் இன்றைய கலந்துரையாடல் அமைந்திருந்தது.

எங்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பாராளுமன்றததிற்குள்ளும் வெளியேயும் மேலக மக்கள் முன்னணி தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர் விரோத சட்ட மூலங்களும் செயற்பாடுகளும் நாடாளுமன்றத்திற்குள்ளே முன்னெடுக்கப்படும் போது அதற்கு எதிரான நிலைப்பாடுகளை நாம் எடுத்துள்ளோம் என்பது எமது நேர்மையான வரலாறாக இருந்திருக்கின்றது.

ஆகவே, பொதுவான இணக்கப்பாடு ஏற்கனவே உள்ளது. இலங்கைத் தொழிலாளா காங்கிரஸை பொறுத்தவரையில் கடந்த காலங்களில் அவ்வாறான செயற்பாடுகளில் இறங்கவில்லை. அவசரகாலச் சட்டம் போன்ற பல்வேறு சட்டமூலங்கள் வரும்போதெல்லாம் பொதுவான இணக்கப்பாட்டுடன் அவர்கள் செயற்படவில்லை.

இன்றைய சூழ்நிலையில் சமீபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை சந்தித்துப் பேசிய பின்னர் தற்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள முழக்கங்களின் அடிப்படையில் எங்கள அனைவருடனும் இணைந்து செயறபடுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான கோரிக்கையையும் விடுக்க விரும்புகிறேன்.

**கேள்வி: அவசரகாலச் சட்டம் தொடாபாக தங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில்: அவசரகாலச் சட்டம் என்பது தமிழ்மக்களின அவமானச் சின்னம் அச் சடடத்தின் அடிப்படையில் வரக்கூடிய பலத்தை வைத்துக்கொண்டுதான் சிங்கள இராணுவமும் பொலிஸாரும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்திலேயே நடைபெறக்கூடிய களநிலைமைகள வேறு. வடக்கு- கிழக்குக்கு வெளியே தலைநகரப் பகுதியிலே எங்களது மேலகப் பகுதிகளிலே வாழக்கூடிய தமிழ் மக்களை இந்த அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொண்டுதான் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பல்வேறு கெடுபிடிகளுக்கும், தொந்தரவுகளுக்கும், சர்ச்சைகளுக்கும் உள்ளாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

வீடுவீடாகத் தேடுதல் நடத்தி எந்தவித குற்றச் செயல்களும் செய்யாத தமிழ் மக்களைக் கைது செய்வது சோதனை செயது பொலிஸ் நிலையங்களில் அடைத்து வைப்பது தனிப்பட்ட குடும்ப விபரங்களைக்கூட எழுத்து மூலமாகப் பதிவு செய்துதரவேண்டும் என்று வற்புறுத்துவது போன்ற பல்வேறு இன்னல்களுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

பல சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக நான் குரல் எழுப்பியுள்ளேன்.

மருந்துக்குக்கூட தமிழர்கள் இராணுவப் பணியில் இல்லாததால் தமக்கு கிடைக்கின்ற அதிகாரங்களை வைத்துக் கொண்டு சிங்கள இராணுவம், பொலிஸ் தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கிவருகின்றது.

**கேள்வி: இதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுகிறதா?**

பதில்: நாடாளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் இதற்கு எதிரான நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். சர்வதேச சமூகங்களுக்கும் அவசரகாலச சட்டம தொடர்பாக எடுத்துக்கூறியுள்ளோம்.

எதிர்காலத்தில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து அவசரகாலச சட்டத்திற்கு எதிராகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் திட்டங்களை தீட்டி வருகிறோம்.

**கேள்வி: ஆறுமுகம் தொண்டமான் தங்களுடன் இணைந்து செயற்பட தொடர்பு கொண்டாரா?**

பதில்: ஆறுமுகம் தொண்டமான் என்னிடம் இதுவரை பேசவில்லை.அவர்களது கட்சியைச் சோந்த சிலர் எமது கட்சியன் சிலருடன் தொடர்பு கொண்டு இருகக கிறார்கள் அனைத்து கடசியும் ஒனறிணைந்து செயற்படவேணடுமென்று அடிபபடையில் சில நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளன. காத்திரமான எந்தச் செயற்பாடுகளும் நடைபெறவில்லை.



எம்மைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியாக இணக்கப்பாட்டுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆறுமுகம் தொண்டமானின் கட்சிதான் பழைய நிலைப்பாடுகளை மாற்றி புதிய நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

**கேள்வி: இதில் ஏதாவது அரசியல் சந்தர்ப்பவாதம் உள்ளது எனக் கருதுகிறீர்களா?**

பதில்: இக்கேள்விக்கான பதிலைப் பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும் ஆறுமுகம் தொண்டமான் உறுதியளித்தபடி அவரும் அவரது கட்சியும் விசுவாசமாக தமிழ்த் தேசிய சிந்தனையுடன் செயற்படுமா என்பதை காலம் காட்டும் பொறுத்திருந்து பாருங்கள். (ற-4)

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி 2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்! வாங்கத் தவறாதீர்கள்!

# சுமார் 600 பேர் பயிற்சி முடித்து எதிரியுடன் மோத தயார் நிலையில்!

## தமிழீழக் கடற்படைத் தளபதி விநாயகம்

(திருநெல்வேலி)

சமாதான காலம் எமது மக்களுக்கு அச்சுறுத்தல் மிகுந்த காலப்பகுதியாக உள்ளது.

இதனால்தான் மக்கள் போர்ப் பயிற்சி பெற்று யாழ்ப்பாணத்தை பிடிக்க முடிவெடுத்துள்ளார்கள் என தமிழீழக் கடற்படையின் துணைப்படைக் கட்டமைப்பிற்குப் பொறுப்பாளாராக பணியாற்றும தமிழீழக் கடற்படையின் தளபதிகளில் ஒருவரான த.விநாயகம் தெரிவித்துள்ளார்.

சிறப்புச் செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய துணைப்படை கட்டமைப்பை பொறுத்தவரை கரையோரத்தில் வாழ்கின்ற மக்கள் நாளுக்கு நாள் சொல்லொனாத் துன்ப துயரங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.இம் மக்களின் சுதந்திர வாழ்விற்காக 18ஆயிரத்திற்கும் அதிகமான மாவீரர்கள் இந்த மண்ணிலே வீரச்சாவைத் தழுவியிருக்கிறார்கள். இலங்கைத் தீவில் இரண்டு இராணுவம் உள்ளது. ஒன்று ஸ்ரீலங்கா இராணுவம். அடுத்தது எங்களது தமிழீழ இராணுவம் தமிழீழ இராணுவம் என்ற அடிப்படையில் நாம் பலமாக இருக்கிறோம். வெறறியின் விழிம்பிலே இன்றைக்கு நின்று கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் வெற்றியின் விழிப்பில் நிற்பதறகுக் காரணம் எங்களுடைய மக்கள் தான். 32 வருடகாலமாக தலைவருக்கு பக்கபலமாக நின்று எங்களுடைய மக்கள் தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மக்கள் பாஸ் நடைமுறை உட்பட பல நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சமாதான காலத்திலாவது நிம்மதியான வாழ்வு வருமென எதிர்பார்த்த மக்கள் சமாதான காலத்தில்தான் கூடுதலான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் இன்றைக்கு இந்த மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் .

யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தை அடித்து கலைப்போம் என்பதில் அவர்கள தெளிவாக உள்ளனர். படையினரிடம் இருக்கின்ற ஏ.கே.-47 துப்பாக்கி கிரனைட் ஆர்.பி.ஜீ. போன்ற ஆயுதங்களை எப்படி இயக்குவது என்ற விடயங்களை நாங்கள் பெற்று விட்டால் தமிழீழ இராணுவத்துடன் இணைந்து மக்கள் படையாக திரண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தை அடித்துத் துரத்தி யாழ்ப்பாணத்தைப் பிடிக்கலாம்.இன்றைக்கு 600ற்கும் மேற்பட்ட மக்கள் ஆயுதப் பயிற்சி பெற்று எதிரியுடன் மோதுவதற்கு தயாராகவுள்ளனர். பல மகஜர்களை இந்த மக்கள் எமது தலைவருக்கு அனுப்பிவைத்தனர்.

'போரைத் தொடருங்கள்' என்றும் 'தலைவா பொறுத்தது போதும்' என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

போரியல் நீரோட்டத்திற்கு ஏற்ப கரையோரப் பகுதிகளில் வாழுகின்ற பெண்களுக்கும் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப தலைமைப்பீடத்துடன் ஆலோசித்து பயிற்சிகளை வழங்கவுள்ளோம். நாங்கள் தமிழீழக் கடற்படையின் துணைப்படையில் பயிற்சி பெறுவோருக்கு அடிப்படைப் பயிற்சியில் இருந்து இராணுவப்பயிற்சிகள் வரை இவர்களது நகர்வுகளுக்கு ஏற்ப வழங்கி வருகிறோம் என்றார். (ற-43)

# பஸ்சேவை நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் அனைத்தும் தற்காலிகமாக இன்றிலிருந்து காலை 7.30 மணிக்கு சேவையில் ஈடுபடும் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது. (ற)

# விஞ்ஞான ஆய்வுகூடங்களை முறையாக பேணும் பாடசாலைகளுக்கு பரிசில்கள்

## -தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அமைந்துள்ள விஞ்ஞான ஆய்வுகூடங்கள் சரியான முறையில் பேணப்பட்டு வருமாயின் அப் பாடசாலைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் என தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் உள்ள ஆய்வுகூடங்கள் முறையாக பராமரிக்கப்பட்டு அங்கு செயற்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டு அன்றாடம் நடைபெறும் மாணவர்களின் ஆய்வுகள் பதிவேடுகளில் பதிவுசெய்யப்படல் வேண்டும். இதற்கமைய இவற்றை ஒழுங்காகப் பேணும பாடசாலைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-108)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் நடாத்தப்பட்ட சுனாமியால் பாதிககப்பட்டவர்களுக்கான இலவச கண் வைத்திய சிகிச்சை முகாமில் கரவெட்டி பிரதேச செயலக கணக்காளர் லயன் எஸ்.கமலேஸ்வரன் கண்பார்வை குறைந்த ஒருவருக்கு கண்ணாடி அணிவிக்கிறார். (படம்:-பரு. நிருபர்)

# வன்முறைகளை மக்கள் நீண்டகாலம் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்

## -எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி

(கொழும்பு)

அரசாங்கம் தற்போதைய வன்முறைகளை நிறுத்தி அமைதிப் பேச்சுக்களை தொடங்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய



கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சிவாஜிலிங்கம் பேசுகையில்,

அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவ்தாக அண்மைய சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைதி நிலை நாட்டப்படாத வரையில் வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இலக்குகளை அரசாங்கம் ஒருபோதும் அடைந்துவிடமுடியாது.வன்முறைகளை நீண்டகாலம மக்கள் பொறுத்துக் கொண்டிருககமாட்டார்கள். இந்தச் செயற்பாடுகள் நீடிக்குமானால் நாட்டை மீண்டும் போருக்கு அரசாங்கம் அழைத்துச் சென்றுவிடும்.

யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்திலும் படையினர் கொல்லப்படுவதற்கு நாம் வருந்துகிறோம். படையினரது இறுதிநிகழ்வுகளை நாம் தொலைக்காட்சிகளில் பார்த்தோம்.

இத்தகைய சம்பவங்கள் தவிக்கப்படல் வேண்டும். வடபகுதியில் மக்கள் குடியிருப்புப பகுதிகளில் உள்ள இராணுவத்தினரையும வ் தித்தடைகளையும் அரசாங்கம் அகற்ற வேண்டும் என்றார். (ற)



நெலலயடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை வங்கியின் பொன அரும்புகள் மன்ற ஆரம்பவிழாவில் மன்றத் தலைவர் செல்வன் எஸ். கஜீபன் உரையாற்றுகிறார். மேடையில் வங்கி உயர் அதிகாரிகள், அதிபர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்:-பரு. நிருபர்)

# கூட்டாட்சி அமைப்பு முறையை புலிகள் ஆதரிக்கவில்லை

## -விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

கூட்டாட்சி அமைப்பு முறையை விடுதலைப் புலிகள் ஆதரிக்கவில்லை என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கூட்டாட்சி அமைப்பு முறைக்குள் தீர்வுகாண வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உண்மையாக இருந்திருந்தால் வடக்கு-கிழக்கு மக்களை ரணில் விக்கிரமசிங்கவுக்காக வாக்களிக்க அனுமதித்திருப்பார்கள்.

கூட்டாட்சி முறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தவில்லை. அவாகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டு சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை தவிர்ப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-4)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பாடசாலை அதிபர் எஸ்.இராகவன் தலைமையுரை நிகழ்த்துவதைப் படத்தில் காண்க. (படம்:-மருதங்கேணி செய்தியாளர்)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்தில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான பத்து நாள் பயிற்சி வகுப்பின் இறுதியில் ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட இறுதிநாள் நிகழ்வு அண்மையில் வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர் தமது உரையில், 2006ஆம் ஆண்டில் ஆசிரியர்களிடமிருந்து தான் எதிர்பார்ப்பது என்ன? என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். தொடர்ந்து ஆசிரியர்களது இசை நடன நிகழ்வு இடம்பெற்றது.

ஆசிரியர்களின் இந் நிகழ்வானது வலயப் பணிப்பாளரின் எதிர்பார்ப்பிற்கு இசைவாக பதிலளிப்பது போல் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள் ஆங்கில, தமிழ் பாடல்களுக்கு நடனமாடினர். அத்துடன் அவர்கள் இசை நிகழ்வுகளையும் மகிழ்ச்சியுடன் மேடை ஏற்றி பயிற்சியின் பெறுபேற்றை வெளிப்படுத்தினர்.

2006ஆம் ஆண்டில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் செயற்பாடுகளை பாடசாலைகளில் தொடர் மதிப்பீடு செய்து வலயக் கல்விப்பணிமனையினர் ஆசிரியர்களுக்கு உதவவுள்ளனர். (ற-108)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

## 12 டெஸ்ட் கிரிக்கெட் போட்டி – பந்துவீச்சு

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் துடுப் பாட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்று சாதனைகளாகப் பதியப்பட்ட சாதனை களை கடந்த வாரங்களில் இடம்பெற்ற கட்டுரைகளில் விரிவாகத் தந்திருந் தோம்.

டெஸ்ட்டில் துடுப்பாட்டம் மட்டும் வெற் றிக்கு வழிசமைப்பதில்லை. பந்துவீச் சும் சரிக்கு சமனாக அமைகின்றது. அதிக வெற்றிகளைப் பெறுவதற்கு பந்துவீச்சு காரணமாக அமைகின் றது.

இதனடிப்படையில் டெஸ்ட்டில் பந்து வீச்சின் மூலம் வீரர்கள் ஏற்படுத்திய சாதனைகளை இவ்வாரம் முதல் தங்க ளுக்குத் தருவதில் மகிழ்ச்சியடைகின் றேன்.

**நே ாயல்**



'வீழ்த்துவதிலே குறியாக இருக்கிறீர்கள்' ஷேன் வோர்ன்

## இனிங்ஸ் ஒன்றில் அதிக விக்கெற்

| | | |
|---|---|---|
| ஜே.லேகர் (இங்) எதிர் அவுஸ் | 10/53 | மஞ்செஸ்ரர் (நான்காவது டெஸ்ட்போட்டி-1956) |
| அனில் கும்ளே (இந்) எதிர் பாக். | 10/74 | டெல்லி (இரண்டாவது போட்டி-1998/99) |
| ஜி.லோமான் (இங்) எதிர் தென்ஆபி | 9/28 | ஜொனெஷ்பார்க் (இரண்டாவது போட்டி-1895/96) |
| ஜே.லேகர்(இங்) எதிர் அவுஸ் | 9/37 | மஞ்செஸ்ரர் (நான்காவது போட்டி-1956) |
| முத்தையா முரளிதரன் (இல) எதிர் சிம் | 9/51 | கண்டி (இரண்டாவது போட்டி-2001/02) |
| றிச்சார்ட் ஹாட்லி (நியூ) எதிர் அவுஸ் | 9/52 | பிறிபேர்ண் (முதலாவது போட்டி-1985/86) |
| அப்துல் ஹாபீர் (பாக்) எதிர் இங் | 9/56 | லாகூர் (முதலாவது போட்டி-1987/88) |
| டி.மல்குலம் (இங்) எதிர் தென்ஆபி | 9/57 | ஓவல் (மூன்றாவது போட்டி-1994) |
| முத்தையா முரளிதரன் (இல) எதிர் இங் | 9/65 | ஓவல் |

## டெஸ்ட் போட்டியொன்றில் அதிக விக்கெட்



| | | | |
|---|---|---|---|
| ஜே.லேகர் (இங்) | எதிர் அவுஸ். | 19-90 | மஞ்செஸ்ரர் (1956) |
| எஸ்.வார்னெஸ் (இங்) | எதிர் தென் ஆபி. | 17-159 | ஜொனெஷ்பார்க் (1913/14) |
| என்.ஹிர்வாணி (இந்) | எதிர் மேற்.இந் | 16-136 | சென்னை (1987/88) |
| ஆர்.ஏ.மாஷி (அவுஸ்) | எதிர் இங். | 16-137 | லோர்ட்ஸ் (1972) |
| மு. முரளிதரன் (இல) | எதிர் இங். | 16-220 | ஓவல் (1998) |
| ஜே.பிறிஜ்ஸ் (இங்) | எதிர் தென் ஆபி. | 15-28 | கேப்ரவுண்(1888/89) |
| வி.லோமான் (இங்) | எதிர் தென் ஆபி. | 15-45 | போர்ட் எலிசபேர்த் (1895/96) |
| சி.பினைதி (இங்) | எதிர் தென் ஆபி. | 15-99 | லீட்ஸ் (1907) |
| எச்.வெறிதி (இங்) | எதிர் அவுஸ். | 15-104 | லோர்ட்ஸ் (1934) |
| றிச்சார்ட் ஹாட்லி (நியூ) | எதிர் அவுஸ். | 15-123 | பிறிஸ்பேர்ண் (1985/86) |
| டபிள்யூ ஹொட்ஸ் (இங்) | எதிர் அவுஸ். | 15-124 | மெல்பேர்ண் (1903/04) |
| ஹர்பஜன் சிங் (இந்) | எதிர் அவுஸ். | 15-217 | சென்னை (2000/01) |

## ஹட்ரீக் (HAT TRICKS)

*எவ்.ஸ்வ்வோர்த் (அவுஸ்) எதிர் இங் மெல்பேர்ண் 1878-79
*வி.றோயல், எவ்.மக்கினஸ், ரி.எமிற்*

*டபிள்யூ.வற்ஸ் (இங்) எதிர் அவுஸ் மெல்பேர்ண் 1882-83
*பி.மக்டொனெல், ஜி.ஜிவ்வின், ஜி.பொணர்*

*ஜே.பிறிஜ்ஸ் (இங்) எதிர் அவுஸ் சிட்னி 1891-92
*டபிள்யூ.ஜிவ்வின், எஸ்.கலவே, ஜே.பிளெக்கம்*

*ஜி.லொமான் (இங்) எதிர் தென்ஆபி போர்ட் எலிசபேர்த் 1895-96
*எவ்.கொக், ஜே.மிட்லிற்றன், ஜே.வில்லியோவி*

*ஜே.கிரேன் (இங்) எதிர் அவுஸ் லீட்ஸ் 1899
*சி.கில், எஸ்.கிரஹறி, என்.நோபிள்*

*எச்.றம்பின் (அவுஸ்) எதிர் இங் மெல்பேர்ண் 1901-02
*ஏ.ஜோன்ஸ், ஜே.கண், எஸ்.பர்னெஸ்*

*எச்.றம்பிள் (அவுஸ்) எதிர் இங் மெல்பேர்ண் 1903-04
*வி.பொஸ்னகெற், பி.வோர்னெர், ஏ.லில்லி*

*ரி.மத்தியூஸ் (அவுஸ்) எதிர் தென்ஆபி மஞ்செஸ்ரர் 1912
*முதலாவது இனிங்ஸ் - ஆர்.வியூமண்ட், எஸ்.பிகினா், ரி.வோர்ட்*
*இரண்டாவது இனிங்ஸ் - எச்.டெய்லர், ஆர்.சர்ச்வார்ஸ், ரி.வோர்ட்*

*எம்.அல்லொம் (இங்) எதிர் நியூ கிறிஸ்றசேர்ச் 1929-30
*ரி.லவ்றி, கே.ஜேம்ஸ், எவ்.பாட்கொக்*

*ரி.கோட்டார்ட் (இங்) எதிர் தென்ஆபி ஜொனெஸ்பார்க் 1938-39
*ஏ.நேர்ஸ், என்.கோர்டன், டபிள்யூ.வேட்*

*பி.லோடர் (இங்) எதிர் மேற்இந் லீட்ஸ் 1957
*ஜே.கோட்டார்ட், எஸ்.றமாடிகின், ஆர்.கில்கிறிஸ்ற்*

*எல்.கிளின்(அவுஸ்) எதிர் தென்ஆபி கேப்ரவுண் 1957-58
*இ.புன்னர், எச்.றெய்பீல்ட், என்.அட்கொக்*

*டபிள்யூ.கோன் (மேற்இந்) எதிர் பாக் லாகூர் 1958-59
*முஸ்தக் முஹமட், பஷால் முஹமட், நஸீம்-உல்-கானி*

*ஜி.கிறிவ்வின் (தென் ஆபி) எதிர் இங் லோர்ட்ஸ் 1960
*எம்.சிமித், பி.வோல்கர், எவ்.ருமான்*

*எல்.கிப்ஸ் (மேற்இந்) எதிர் அவுஸ் அடிலெய்ட் 1960-61
*கே.மக்கே, ஏ.கிறவுட், எவ்.மிசன்*

*பி.பேத்றிக் (நியூ) எதிர் பாக் லாகூர் 1976-77
*ஜாவிட் மியாண்டட், வஸீம் ராஜா, இன்ரிகப் அலாம்*

*கொட்னி வோல்ஷ் (மேற்இந்) எதிர் அவுஸ் பிறிஸ்பேர்ண் 1988-89
*ஏ.டொட் மேடி, எம்.வெலிட்டா, ஜி.வூட்*

*எம்.ஹகிஸ்(அவுஸ்) எதிர் மேற்இந் பேர்த் 1988-89
*அம்புறொஸ், வி.பாற்றர்ஸன், சி.கிறீனிட்ஜ்*

*டி.பிளமிங் (அவுஸ்) எதிர் பாக். ராவல்பிண்டி 1994-95
*அமீர் மலிக், இன்சமாம்-உல்-ஹக், சலீம் மலிக்*

*ஷேன் வோர்ன் (அவுஸ்) எதிர் இங். மெல்பேர்ண் 1994-95
*பி.டிவிறிரஸ், டி.கொக், மல்குலம்*

*டி.கோர்க் (இங்) எதிர் மேற்இந் ஓல்ட்றவோர்ட் 1995
*ஆர்.றிச்சர்ட்ஸன், ஜே.முறே, கார்ள் கூப்பர்*

*டி.கொக் (இங்) எதிர் அவுஸ். சிட்னி 1998-99
*லான்கீலி, எஸ்.மக்கில், சி.மில்லர்*

*வஸீம் அக்ரம் (பாக்) எதிர் இல. லாகூர் 1998-99
*றொமேஷ் களுவித்தரண, எம்.பண்டார திலக, ஜி.விக்கிரமசிங்க*

*வஸீம் அக்ரம் (பாக்) எதிர் இல. டாகா 1998-99
*அவிவு குணவர்த்தன, சமிந்தவாஸ், மஹேல ஜெயவர்த்தன*

*நுவான் சொய்ஷா (இல) எதிர் சிம். ஹராரே 1999-2000
*ரி.கிறிப்பர், எம்.குட்வின், என்.ஜோன்சன்*

*அப்துல் ராஷாக் (பாக்) எதிர் இல. காலி 1999-2000
*றொமேஷ் களுவித்தரண, ரங்கன ஹேரத் குமார் புஷ்பகுமார*

*கிளென் மென்ரா (அவுஸ்) எதிர் மேற் இந். பேர்த் 2000-01
*எஸ்.கம்பிள், பிரைன் லாரா, ஜே.அடம்ஸ்*

*ஹர்பஜன் சிங் (இந்) எதிர் அவுஸ். கொல்கட்டா 2000-01
*றிக்கி பொன்டிங்,* அடம்ஸ் கில்கிறிஸ்ட், ஷேன் வோர்ன்

*(அடுத்த வாரம் தொடரும்)*

## அதிக விக்கெட்டுக்கள்






| | போட்டி | பந்து | மெய்டின் | ஓட்டம் | விக். | சரா. | சி.பந்து வீச்சு | 5 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஷேன் வோர்ன் (அவுஸ்) | 133 | 37,391 | 1667 | 16,287 | 651 | 25.01 | 8-71 | 34 | 10 |
| முத்தையா முரளிதரன் (இல) | 99 | 33,173 | 1448 | 13,128 | 584 | 22.47 | 9-51 | 48 | 14 |
| கிளன் மெக்ரா (அவுஸ்) | 117 | 27,447 | 1370 | 11,457 | 535 | 21.41 | 8-24 | 28 | 03 |
| கொட்னி வோல்ஷ் (மேற்இந்) | 132 | 30,019 | 1114 | 12,688 | 519 | 24.44 | 7-37 | 22 | 03 |
| அனில் கும்ளே (இந்) | 100 | 31,491 | 1295 | 13,574 | 485 | 27.98 | 10-74 | 30 | 08 |
| கபில் தேவ் (இந்) | 131 | 27,740 | 1060 | 12,867 | 434 | 29.64 | 9-83 | 23 | 02 |
| றிச்சார்ட் ஹாட்லி (நியூ) | 86 | 21,918 | 809 | 9,611 | 431 | 22.29 | 9-52 | 36 | 09 |
| வசீம் அக்ரம் (பாக்) | 104 | 22,627 | 871 | 9,779 | 414 | 23.62 | 7-119 | 25 | 05 |
| அம்புறொஷ் (மேற்.இந்) | 98 | 22,103 | 1001 | 8,501 | 405 | 20.99 | 8-45 | 22 | 03 |
| இயன் பொத்தம் (இங்) | 102 | 21,815 | 788 | 10,878 | 383 | 28.40 | 8-34 | 27 | 04 |
| ஷோன் பொலக் (தென்.ஆபி) | 94 | 21,314 | 1095 | 8,329 | 377 | 22.09 | 7-87 | 16 | 01 |
| எம்.மார்ஷல் (மேற்.இந்) | 81 | 17,585 | 613 | 7,876 | 376 | 20.94 | 7-22 | 22 | 04 |
| வக்கார் யூனிஸ் (பாக்.) | 87 | 16,224 | 516 | 8,788 | 373 | 23.56 | 7-76 | 22 | 05 |

# ஈராக் போரை தடுத்துநிறுத்த முடியாததில் பெரும் வருத்தம்

## -கொபி அனான்

(நியூயோர்க்)

ஈராக் போரைத் தடுத்துநிறுத்த முடியாதது பெரும் வருத்தம் அளிக்கிறது'



என ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் அடுத்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறுகிறார். இந்த ஆண்டுக்கான இறுதி பத்திரிகையாளர்கள் கூட்டத்தை கடந்த புதன்கிழமை அவர் நடத்தினார்.

அப்போது, அவர் கூறியதாவது, ஐ.நா.சபை உலகளவில் பல நல்ல செயல்களை மேற்கொண்டுள்ளது. ஆனால ஈராக் போரை தடுத்துநிறுத்த முடியாதது பெரும் வருத்தத்தை அளிக்கிறது. இது ஐ.நா சபையில பிளவை ஏற்படுத்தி விட்டது. சர்வதேச சமூகமாக ஐ.நா.சபை விளங்குகிறது. அந்தப் போரை நாம் தடுத்துநிறுத்தியிருந்தால் அனைவரும் நல்ல பலனை அளித்திருக்கும்.

அதிகாரம் மிக்க 15உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்பு கவுனசிலை விரிவுபடுத்தவேண்டியது மிக அவசியமான ஒன்று தற்போதைய மாறுதல்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்தால் பாதுகாப்பு கவுன்சில் மேற்கொள்ளும் சீர்திருத்தங்களுக்குப் பலன் கிடைக்காமல் போய்விடும்.

நடந்துமுடிந்த ஆண்டில் பல பகுதிகளில் தீவிரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன. வளைகுடாப் பகுதி, ஈராக்கில் நடக்கும் தாக்குதல்கள், பலஸ்தீன-இஸ்ரேல் மோதல், லெபனானில் நடந்த அரசியல் கொலைகள் ஆகியவை முக்கியமான சம்பவங்களாக அமைந்துள்ளன.

வரும் ஆண்டில் வறுமை ஒழிப்பு, அமைதியை நிலைநாட்டுவது, சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் காட்டும் உறுதி ஆகிய விஷயங்களில் ஐ.நா.சபை கவனம் செலுத்தும். உறுப்பினர் நாடுகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளைப் போக்குவதிலேயே கூடுதல் ஈடுபாடு காட்டவேண்டியிருக்கும்.

வோல்கர் கமிட்டி அறிக்கையைப் பரிசீலனை செய்ததன் மூலம் ஐ.நா.சபை சரியான பாடங்களைக் கற்றுள்ளது. தவறு நடந்த விஷயங்களைச் சரிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அடுத்த ஐ.நா.பொதுச் செயலராக ஆசிய கண்டத்தை சேர்ந்த ஒருவர் வருவதை சில நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த காலங்களில் சுழற்சி முறையிலேயே இப்பதவி நிரப்பப்பட்டு வருகிறது. அதன்படி அடுத்த ஐ.நா.பொதுச் செயலராக ஆசியாவைச் சேர்ந்த ஒருவரே வரவேண்டும் என்பது பெரும்பான்மையான உறுப்பினர் நாடுகள் மற்றும் எனது கருத்தாக உள்ளது என கொபி அனான் கூறினார். (ற)



லாஸ் ஏஞ்சல்சில் நடந்த படப் பிடிப் பிற்கு வருகை தந்த கலிபோர்'னியா கவர்னர் அர்னால்டு ஸ்வாஸநேகரை மகிழ்வுடன் வரவேற்கிறார் சில்வஸ்டெர் ஸ்டாலன்.

WORLD NEWS உலக தரிசனம்

# 'அமெரிக்க அரசு தரப்பிலிருந்து சொல்வது யாவும் பொய்களே

## -வழக்கு விசாரணையில் சதாம்

(பக்தாத்)

காவலில் வைத்திருந்தபோது அமெரிக்கர்கள் என்னை அடித்தது உண்மை.



இது தொடர்பாக அமெரிக்க அரசு தரப்பிலிருந்து சொல்வது யாவும் பொய்களே என்று சதாம் உசேன் நேற்று முன்தினம் பக்தாத் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

ஈராக் அதிபராக சதாம் ஹுசைன் இருந்தபோது டுஜைல் என்ற நகரைச் சேர்ந்த 140 ஷியா முஸ்லிம்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள். அது தொடர்பான வழக்கு விசாரணை பக்தாத் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நீதிமன்றத்துக்கு தன்னை விசாரிக்கும் அதிகாரம் கிடையாது, தான் இன்னமும் அதிபர்தான் என்று கடந்த வாரம் கூறிய சதாம் ஹுசைன், புதன்கிழமை விசாரணையின்போது ஒத்துழைத்தார்.

புதன்கிழமை சாட்சியம் அளித்த ஒரு இளைஞர், சம்பவம் நடந்தபோது தான் சிறுவனாக இருந்ததையும் அங்கு சித்திரவதைக் கூடத்தில் நடந்தவற்றையும் விரிவாக விபரித்திருந்தார். கொதிக்கும் பிளாஸ்டிக்கை உருக்கி அதை தோலில சொட்ட வைத்து சித்திரவதை செய்தனர். என்று அவர் கூறியிருந்தார். அவரையும் பிற அரசுத்தரப்பு சாட்சிகளையும் கேள்வி கேட்க சதாமுக்கு நேற்று முன்தினம் வாய்ப்புத்தரப்பட்டது.

அப்போதுதான் அவர், தான் தாக்கப்பட்டது குறித்து மீண்டும் புகார் செய்தார். அமெரிக்காவிலே வெள்ளை மாளிகையிலே அதிகாரத்தில் இருப்பவர் ஒரு பொய்யர் அமெரிக்கர்கள் என்னைச் சிறைக் கைதியாக வைத்திருந்த போது அடித்து சித்திர வதை செய்தார்கள். என் உடம்பில் அடிபடாத இடமே கிடையாது சில இடங்களில் பட்ட காயம் ஆற எட்டு மாதங்கள் கூட ஆனது.

அமெரிக்க அதிகாரிகள் கூறுவதை யெல்லாம் நம்பிவிடக்கூடாது. என்னை போர் வெறியனாகச் சித்திரித்தார்கள். அமெரிக்காவையும் பிற மேலை நாடுகளையும் அழிக்க அணு ஆயுதம் தயாரித்து வைத்திருப்பதாக என்மீது"அபாண்டமாகக் குற்றஞ்சாட்டினார்கள்.

என் ஆட்சிக்காலத்தில் பல இடங்களில் இரசாயன ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக உலகையே நம்ப வைத்தார்கள். இப்போது ஈராக் முழுவதும் அவர்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இப போது சொல்கிறார்கள், எங்கும் ஆயுதங்கள் இல்லை. எங்களுக்கு அப்போது அப படித்தான் தகவல்கள் கிடைத்தன என்று. இவர்களை எப்படி நம்பமுடியும்? காவலில் இருந்தபோது என்னை அடித்தார்கள் என்று நான் கூறியதை அமெரிக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர். யூதர்களும் அமெரிக்கர்களும் சதாம் ஹுசைனை வெறுக்கின்றனர். எனவே அடித்துவிட்டு இல்லை என்று மறுக்கின்றனர் என்றார் சதாம் உசேன். (ற)

# ஈராக்கிலிருந்து 2006இல் படைகள் வாபஸ் -பிளேயர்

(பாஸ்ரா)

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி அகற்றப்பட்டதை தொடர்ந்து அமெரிக்கா-இங்கிலாந்து உட்பட பலவேறு நாடுகளின்



கூட்டுப்படை அங்கு தங்கி இருந்து மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை கவனித்துவருகிறது.

இவர்கள் மீது தீவிரவாதிகள் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தற்கொலைப்படைத்தாக்குதலில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பலியாகிவிட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் இங்கிலாந்து பிரதமர் ரோனி பிளேயர் நேற்று முன்தினம் திடீரென்று ஈராக் சென்றார். பாஸ்ரா நகரில் முகாமிட்டுள்ள இங்கிலாந்து இராணுவத்தினரைச் சந்தித்து அவர்களுக்கு ரோனி பிளேயர் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். வீரர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசுகளையும் வழங்கினார்.


இராணுவ வீரர்கள் மத்தியில் ரோனி பிளேயர் உரையாற்றினார். சோர் வடைந்த வீரர்களை அவர் உற்சாகப்படுத்தினார்.

ரோனி பளேயர் அங்கு பேசும போது "ஈராக்கில் இருந்து இங்கி லாந்து படை அடுத்த ஆண்டு முதல வாபஸ் ஆகும் படிப்படியாக படைகள் வாபஸ் ஆகும் அதற்கு முன்னதாக ஈராக் இராணு வம் பாதுகாப்புப் பணிக்கு முழுத்தகுதி பெற்றுவிடுவார்கள் என்று எதிர்பார்க் கிறோம்'' என்றார்.

ஈராக்கில் இப்போது 8ஆயிரம் இங்கிலாந்து வீரர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவு செயலர் ஷியாம் சரண் அந்நாட்டு வெளியுறவுதுறை அமைச்சர் கன்டோலிசா ரைசை சந்தித்து பேசினார்.



இந்தியாவின் தொலைத்தொடர்பு செயற்கைகோள் இன்சாட்-4ஏ விண்ணில் நேற்று முன்தினம் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது. ஐரோப்பாவின் பிரெஞ்சு கயானா ஏவுதளத்திலிருந்து இன்சாட் -4 ஏ வையும் ஐரோப்பாவின் வானிலை செயற்கைகோள் எம்.எஸ்.ஜி.2வையும் சுமந்துகொண்டு விண்ணில் சீறிப் பாய்கிறது ஏரியான் -5 ராக்கெட்

தீய எண்ணங்களுக்கு எப்போதாவது சிறிதேனும் இடம் கொடுத்து விட்டால் பின் உறுதியுடன் நன்மையை நாடுதல் கஷ்டமாகிவிடும்.

- ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## பொதுமக்களைத் தாக்குவது நிறுத்தப்படவேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்களால்,யுத்தப் பீதி ஏற்பட்டுள்ளது.

வீதிகள் தோறும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். எந்நேரமும் யுத்தம் வெடிக்கும் அபாயம் உறுதியாகத் தெரிகிறது.

சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதில் தாமதமாக்கும் ஒவ்வொரு கணமும் யுத்தத்தை நோக்கிய பயணிப்பாக நிலைமையுள்ளது.

இதில் மிகவும் மோசமானது பொதுமக்கள் மீது படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கையாகும்.

குண்டுச் சத்தங்கள் கேட்டவுடன் வீதியால் போவோர் வருவோரை படையினர் கடுமையாகத் தாக்குகின்றனர்.

குண்டுத்தாக்குதலை நடத்தியவரை கைது செய்வது அல்லது அவர் மீது தாக்குதல் நடத்துவது ஏற்புடையது.

இதைவிடுத்து ஏதுமறியாத பொதுமக்களை தாக்குவதில் நியாயப்பாடு எதுவும் இருக்கமுடியாது. கடந்த காலங்களில் படையினர் தமிழ் மக்கள் மீது நடத்திய தாக்குதல்கள்-அடாவடித்தனங்களின் ஒட்டுமொத்த விளைவே விடுதலைப் போராட்டமாகும்.

யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் படையினர் தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டவுடன் பொதுமக்களைத் தாக்குவது எதற்காக?

தாம் சிங்க்ளப் படைகள் என்பதை நிரூபிப்பதற்காகவா? அல்லது தமது கடமை தமிழர்க்ளைத் தாக்குவதென்பதா?

தமிழர்களின் குடியிருப்புப் பகுதிகளில் படையினரைக் குவித்துவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு ஊறுவிளைவிக்கும் அநாகரிகச் செயல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கும் கொடூரச்செயலை கட்டுப்படுத்த படைத்தளபதிகள் உடனடியாக நடவடிக்கையெடுக்கத் தவறின் சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து வாழ முடியாதென்பது உறுதிநிலையை தமிழ்மக்களிடையே ஏற்படுத்தி விடும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும் அவரது தேர்தல் பிரசாரத்தில் கூறப்பட்டது போல் சண்டைக்கான ஆயத்தங்கள் தொடங்கப்பட்டு விட்டன.

வெளிநாடுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தலாம் என்ற சிங்கள பேரினவாதிகளின் கற்பனைவாதம் படையினரின் உயிருக்குப் பாதகமாகவே அமையும்.

மனித உயிர்கள் அழிக்கப்படுவதை யாருமே விரும்பமாட்டார்கள். யாரும் விரும்பவும் கூடாது. ஆனால் படையினரை அழிக்கும் நோக்கிலேயே அரசின் போக்கு உள்ளது.

யுத்த நிறுத்தத்தை மீளாய்வு செய்தல் ,நோர்வேயை வெளியேற்றுதல் ,பொதுக்கட்டமைப்பை இரத்துச்செய்வது என்ற முடிவுகள் எல்லாம் எதனைக்குறிக்கிறது? மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் உள்நோக்கிலான அறிவிப்புக்கள் அல்லவா?

எதுவாயினும் இவை இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடவைக்குமே அன்றி வேறு எதனைத்தான் செய்யும்?

# அமெ. வெளிவிவகார அமைச்சர் றைஸ் ஜனவரி முற்பகுதியில் இலங்கை வருகை

## இத்தாலி உயர்மட்டக் குழு அடுத்த வாரம் வருகிறது

(கொழும்பு)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொன்டலிஸா றைஸ் ஜனவரி மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க அமைச்சரின் பயணத்தின் மூலம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான உறவுகள் மேலும் வலுவடையும்.இந்தியாவுக்கு பயணம் செய்து பிரதமர் மன்மோகன் சிங்கையும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்தித்ததன் மூலம் இலங்கைக்கு பல நன்மைகள் கிடைத்துள்ளன.

இலங்கையின் இறைமை பாதிக்காத வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது.

இந்தியாவுடன் உறவுகளைப் பேணும் அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்துடனும் ஜப்பானுடனும் எமது உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கு ஜயந்த தனபால போட்டியிடுகின்றமையினால் அவருக்கு ஆதரவாக பிரசாரங்களை எமது அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்றார்.

இதனிடையே இத்தாலி நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டோனியோ அமந்தோ தலைமையிலான குழுவினர் அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இத்தாலியின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழிப்பேரலை மீளமைப்புத் திட்டங்களை இக் குழு பார்வையிடும்.

இத்தாலி நாட்டின் பிரதி வெளிவிகார அமைச்சர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆயுதக் குழுக்கள் தொடர்பான இணைத்தலைமை நாடுகளின் குற்றச்சாட்டுக்கு அரசு பதிலளிப்பு

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் பதில் அளித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வன்முறைகள் அதிகரிப்பதற்குக் காரணம் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் என்று பிரஸெலசில் நடைபெற்ற உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ் ஆயுதக் குழுக்களுடன் அரசாங்கமோ ஸ்ரீ லங்கா இராணுவமோ எவ்விதத் தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை. அதனால் உதவி வழங்கும் நாடுகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடககு-கிழக்கில் விடுதலைப் புலிகளே அசம்பாவித நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து அவர்கள் 44 முறை யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறியிருப்பதாகவும் அரச தரப்பு கூறுகிறது.

மேலும், கடந்த 18ஆம் திகதியிலிருந்து விடுதலைப் புலிகள் 20 பாதுகாப்புப் படையினரை படுகொலை செய்துள்ளதுடன் 17 கைக்குண்டுத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

2002ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடனபடிக்கைக்கமைய புளொட்,ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப. ஆகியவற்றின் ஆயுதங்கள் அரசாங்கத்தால் பொறுபபேற்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்கப் பேச்சாளர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒரு அங்கம் என்பதால் கருணா குழு விடயத்தை விடுதலைப் புலிகளின் தலைமையே ஏற்க வேண்டும் என்று அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு அறிவித்திருபபதாகவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார் என்று அவ் ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இந்தியக் கூட்டாட்சி முறையிலான அதிகாரப்பகிர்வு இலங்கைக்கு ஒருபோதும் பொருந்தாது -ஜே.வி.பி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சிறிய காட்டுப் பகுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு எமது தாயகம் என்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவா இதனைத் தெரிவித்துள்ளார்.

விமல் ரத்னாயக்க அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

புலிகள் குறித்தும் புலிகளின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் செயற்படும் நபர்களினதும் தவறான செயற்பாடுகள் கருத்துக்களை அம்பலப்படுத்துவது வெளிவிவகார அமைச்சின் பெரும் பொறுப்பாகும்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு துணைபோகும் நிதி வழங்குதலுக்கு ஏதிரான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசிய மாகும்.

பிரான்ஸில் இருந்து பல இலட்சம் ரூபா புலிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இவற்றைத் தடுக்க உரிய வழிவகைகளை முன்னெடுக்குமாறு புதிய வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

புலிகளுக்கு சர்வதேச பலம் என்பது அத்தியாவசியமாகவுள்ளது. இதனையே புதிய இராணுவத் தளபதியும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எமது நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேச மயபபடுத்தியது பெரும் தவறாகும். தேவைக்கு அதிகமாகவே இந்த நிகழ்வு நடைபெற்றுவிட்டது.

சூடான் ,சைப்பிரஸ் போன்ற நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் சர்வதே மயப்படுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்ட விளைவுகளானது எமக்கு சிறந்த படிப்பினையாகும்.

வடக்கு-கிழக்கில் இருக்கும் சிறிய காட்டுப் பகுதிகளைப் பிடித்து வைத்துக்கொண்டு இதுதான் எமது தாயகம் என்று புலிகள் கூறுவதை சில சமாதானக் காகங்கள் பெரிதாக எடுத்துக்கொண்டு சர்வதேச ரீதியில் பெரும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியக் கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வு இலங்கைக்கு ஒருபோதும் பொருந்தாது. இந்த அதிகாரப் பகிர்வு முறை இலங்கைக்கு ஏற்றது என்று பலரும் கூறுகின்றனர்.உலகில் 5ஆவது பெரிய இராணுவப் பலத்தை இந்தியா கொண்டுள்ளது. பாரிய தேசபக்தி இயக்கத்தை அவர்கள் கட்டியெழுப்பியுள்ளனர். இந்த தகுதிகள் எதுவும் இலங்கைக்கு இல்லை.

இந்த நிலையில் இந்தியக் கூட்டாட்சி முறையை அவ்வாறே ஏற்றுக் கொள்வது அர்த்தமற்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகளை தடைசெய்யும் நடவடிக்கைகள்ளை புதிய வெளிவிவகார அமைச்சு மும்முரமாக முன்னெடுத்தல் அவசியம் என்றார். (ற-4)

# ஏறாவூரில் இளம்பெண் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி ஏறாவூர் எல்லை வீதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இளம் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் அவருடைய தந்தையார் காயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் கந்தசாமி வள்ளிநாயகி (வயது-18) என்றும் காயமடைந்தவர் தம்பிராசா கந்தசாமி (வயது-51) என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டிற்கு வெளியே சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டத்தை அவதானித்த தகப்பனும் மகளும் எட்டிப் பார்த்த வேளை இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. (ற)

## உள்ளூராட்சி தேர்தல்;

# வாக்காளர் அட்டை அச்சிடும் பணி அடுத்த சில மாதங்களுக்குள் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் தொடர்பான அச்சிடும் பணிகளைத் தொடங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார் என அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணி அடுத்த சில மாதங்களுக்குள் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கான கடதாசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் கால அவகாசம் தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



சுதந்திரர்களானதும் பைத்தியம் பிடித்தவர்களைப் போல சமுதாயத்தை விட்டு காட்டிற்கு ஓடி குகைகளில் வாழ்ந்து உயிரை விட வேண்டிய அவசியம் இல்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொள்வோம்.

சுவாமி விவேகானந்தர்

யாழ்.இந்துக்கல்லூரியில் இருந்த

# மாவீரர் நினைவுத்தூபி நேற்று இராணுவத்தால் சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குள் நேற்று மாலை அத்துமீறி நுழைந்த இரா ணுவத்தினர், கல்லூரி மாணவர்களால் அமை க்கப்பட்ட மாவீரர் நினைவுத் தூபியை முழு மையாக சேதப்படுத்தியுள்ளனர்.

பாடசாலை வகுப்பறைக் கதவுகளை யும் தளபாடங்களையும்அடித்துச் சேதமாக் கியுள்ளனர். அத்துடன் பாடசாலைக்குச் சொந்தமான ஆவணங்களை தீயிட்டுக் கொளுத்தியதாகவும் அந்நேரம் கடமை யில் நின்ற ஊழியர்களும் ஆசிரியர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டு பல மணிநேரம் கட்டிவைக்கப்பட்டதாகவும் யாழ்.இந்துக் கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்தை கல்லூரி மாணவர் சமூ கத்தினராகிய தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்துக்கல்லூரிக்கோ ஏனைய பாடசாலைகளுக்கோ இனியும் அச்சுறுத்தல் நிகழும் வகையில் இராணுவம் நடந்து கொண்டால் பின் கடும் விளைவுக ளை எதிர்நோக்க நேரிடும் எனவும் எச்சரித் துள்ளனர். (ச)

# வாடிக்கையாளர் சேவை நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ்.மாநகர சபை எல்லைக்குட் பட்டதும், திருநெல்வேலியில் அமைந் துள்ளவையுமான வர்த்தக வங்கிகளும் மறுஅறிவித்தல் வரை வாடிக்கையாளர் களுக்கான அலுவலக சேவை நேரத்தை பிற்பகல் 2மணி வரை மட்டுப்படுத்தியுள் ளதாக பிராந்திய முகாமையாளர் அறிவித் துள்ளார்.வாடிக்கையாளர் நலன் பாதிக்கப் படுவ தையிட்டு தாம் மனம் வருந்துவதா கவும் இத்தீர்மானம் யாழ்.மாவட்ட வங்கி யாளர் சங்கத்தினால் எடுக்கப்பட்டது என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (ற)



சாமியே சரணம் ஐயப்பா

வியாவில் ஐயனார் கோவில் காரைநகர்

**மகரஜோதிப் பெருவிழா**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் 25.12.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் ஐயப்ப பெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெற திருவருள் கூடியுள் ளது.

கிரிகைகள், சாஸ்தர பீடம் பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் தலைமை யில் நடைபெறும். யாழ்.மாவட்ட 18 ஆம் படி குருசாமி அ.இந்திரதாசன் (தாவடி) ஸ்ரீ சடகோபராமானுஜ ஐயப்ப பக்த சபை மதுரை அவர்கள் கலந்துகொள்ளும் இவ் விழாவில் ஏனைய குருசாமிமார்கள், மாலை அணி யப் பெற்ற ஐயப்ப சுவாமிமார்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து ஐயப்பன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பாராட்டி வாழ்த்துதல்**

அமரர் கஞமாத்தையா நினைவுப் பதக்கம் வழங்கல் நாதஸ்வர மேதை அமரர் காரை என்.கே.கணேசனின் புதல்வன் க.பவப்பிரியனுக்கு

**விசேட நிகழ்ச்சி**

**இளம் நாதஸ்வர தவில் கலைஞர்களின் கச்சேரி இடம் பெறும்.**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| கணேசன் பவப்பிரியன் | B.மது |
| S.பாலமுருகன் | S.செந்தில் |
| P.குமரேசன் | கணேசன் செந்தூரன் |

வியாவில் ஐயனார் இளைஞர்களினால் நடைபெறும் மகேஸ்வரப் பூஜை யில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம், அடியார்கள் அனைவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-ஆலய பரிபாலகர்கள்.

வியாவில்,
காரைநகர்.

விளம்பர அனுசரணை:- கஜமுகன் ஹாட் வெயர்ஸ்
T.P-222 7182
222 7144
222 2833
147,149 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

(c-47)




# புங்குடுதீவில் தொடரும் கடற்படை வற்புறுத்தல்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் கடற்படையினர் இரவு பகலாக வீடுகளுக்குச் சென்று தாக்குதல் நடத்துவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மடத்துவெளியில் பாலியல் வல்லுறவுக் குப்பின் யுவதியொருவர் கொலை செய்யப் பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. அவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்களை அடையாளம் கண்டு அவர்களை விசாரணைக்கென அழைத்துச்சென்று தாக் குவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பொதுமக்களால் சேதமாக் கப்பட்ட கடற்படையினரின் மக்கள் தொடர்புப் பணிமனையை திருத்தித்தருமாறு கடற்படை யினர் தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதாக வும் தமது கோரிக்கைகள் குறித்து எவரிட மும் முறையிடக்கூடாது எனவும் அவர்கள் மிரட்டியதாக மக்கள் தெரிவித்தனர். (ச-78)

## போராளி வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த 22.12.2005 அன்று தவறுத லான விபத்தின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கப்டன் முல்லை என அழைக்கப் படும் அராலியைச் சொந்த இடமாகவும் குளக்கட்டு வீதி, உடையார் கட்டு, முல்லைத் தீவைச் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் தயாழினி (துயர்) என்ற போராளியே சாவடைந்துள்ளார். (ச-8)

## பிஸ்டல் மீட்பு

(கண்டி)

கண்டி மாவத்தை விகாரைக்கு அருகில் பாதையில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த பிஸ்டலை பொலிஸார் மீட்டுள்ள னர்.இத்தாலி தயாரிப்பான மில்லிமீற்றர் 8 ரகத்தைச் சேர்ந்த இந்த பிஸ்டல் செயற்படும் நிலையில் இருந்தது என தெரியவந்துள்ளது. வீதித் துப்புரவு நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் இதனைக் கண்டெடுத்துள்ளார். (ச)

## சாவகச்சேரியில் தாக்குதல்...

உடனடியாக கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. அத்துடன் பலாலியில் இரு ந்து ஏ-9 பாதையூடாகச் சென்ற வாக னங்கள் நுணாவில் ஊடாக திருப்பியனுப் பப்பட்டன.

இதேவேளை தென்மராட்சியில் பெரு மளவான இராணுவத்தினர் இரவிரவாக குவிக்கப்பட்டுள்ளனர். இரவோடு இரவாக வீடுகளிலும் புகுந்துபடையினர் தேடுதல் நடத்தியதால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ச-108,43,8)

## இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

(கிளிநொச்சி)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

தரைவழியாக நாளை காலை கிளி நொச்சிக்கு வரும் அவர்கள் முற்பகல் 11 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமா தான செயலகத்தில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன் றியம் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடு களின் பிரதிநிதிகளே இன்றைய சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## புங்குடுதீவுச் சம்பவத்தின்...

பகுதியில்இளம் யுவதி மீது கடற்படையி னர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திபடு கொலை செய்த சம்பவத்தைக் கண்டித் தும் இவ்வாறான கொடூரங்கள் இனிவரும் காலங்களில் செய்யக்கூடாது என்ற எச்ச ரிக்கையாக நேற்று மன்னாரில் கடற் படையினர் மீது தாக்குதலை நடாத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தியமைக்காக மன்னார் மாவட்ட பொங்கியெழும் மக்கள் படைக்கு எமது நன்றிகள் என யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-8)

## கடற்படையின் வாகனத் தொடரணி...

மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி சென்ற கடற்படையின் வாகனத் தொடர் அணி மீது பேசாலை நகருக்கு அப்பால் நூறு வீட்டுத்திட்டத்துக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் நடாத்தப்பட்ட இக் கிளைமோர்த் தாக்குதலில் 15 கடற்படை யினர் கொல்லப்பட்டனர்.மேலும் 15 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக கடற் படையின் பேச்சாளர் கொமாண்டோ ஜய ந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் நோக்கி கடற்படையி னரை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி ஒன்றும் டிரக் வண்டி ஒன்றுமே கிளைமோர் கண் ணியில் சிக்கியது. அத்துடன் கிளைமோர் வெடித்ததுடன் ஆர்.பி.ஜீ. தாக்குதலும் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலில் பஸ் வண்டி தீப்பற்றி எரிந்ததாகவும் டிரக் வண்டி பலத்த சேதம் அடைந்ததாகவும் கடற் படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

காயமடைந்த கடற்படையினரில் 3 பேர் அனுராதபுர வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். காயம டைந்த கடற்படையினர் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கடற் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தினை விடுத லைப்புலிகள் தான் மேற்கொண்டார்கள் என கடற்படை குற்றம் சாட்டியுள்ளது. சம்பவத்தையடுத்து குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்களை கடற்படையினர் தடுத்து வைத்துள்ளனர். அத்துடன் மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான போக்கு வரத்துயாவும் தடைப்படுத்தப்பட்டு பய ணிகள் எல்லோரும் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடற்படை மீதான தாக் குதலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென விடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-8)




மனோகரா யாழ்.

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக

சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த

ஆறு

காட்சிநேரம்: காலை 10.30. மதியம் 1.30 மாலை 4.30. இரவு 7.30,10.30 (புதியநேரம்)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.